ARULMIGU PALANIANDAVR ARTS COLLEGE FOR WOMEN
(Autonomous)
(Re-Accredited with 'B++' Grade by NAAC 3rd Cycle)
Run by Arulmigu Dhandayuthapani Swamy Thirukoil, H.R & C.E Dept. Government of Tamil Nadu
A Government Aided College - Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal
CHINNAKALAYAMPUTHUR(PO), PALANI - 624615

## LEARNING RESOURCES

# HISTORY OF SAIVISM AND VAISHNAVISM

**PREPARED**

**BY**

**PG & RESEARCH DEPARTMENT OF HISTORY**

# Objective Questions and Answers
# Descriptive Answers

1.இந்து மதத்தின் பழங்காலச் பெயர் என்ன?.
சநாதன தர்மம்

2.சிந்து நதி திரத்தில் வசித்த ஆரியர்களை பாரசிகரும் கிரேக்கரும் எவ்வாறு அழைத்தனர்?
சிந்துக்கள் (அல்லது) இந்துக்கள்

3.இந்துமதம் என்பதன் பொருள் என்ன?
ஒழுக்க நெறியோடு கூடிய அன்பு மதம்

4.வேதம் என்பதன் பொருள் என்ன?
அறிவுநூல்

5. ரிக்வேதம் என்பதன் பொருள் என்ன?
துதித்தல் (அல்லது) வழிபடல்'

6.வேதத்தை தொகுத்தவர் யார்?
வேத வியாசர்

7.உபநிஷத் என்பதன் பொருள் என்ன?
ஆச்சாரியன் அருகில் உட்கார்ந்து அறிந்து கொள்ளப்படும் ஞானம்

8.கடவுள் என்பதன் பொருள் என்ன?
எல்லாவற்றையம் கடந்தவர்

9. யாகம் என்பது எதனுடைய பொருள்?
யஜூர் வேதம்

10.குரு என்பதன் பொருள் என்ன?
இருளை நீக்குபவர்

11.திட்சை என்றால் என்ன?
ஞானத்தை கொடுத்து பாசத்தை மீட்பது

12. வாசகம் என்பதன் பொருள்?
உபதேசம்

13. உபதேசம் மூலம் ஞானம் பெறும் தீட்சை எது?
வாசக தீட்சை

14. யோகம் என்பதன் பொருள் என்ன?
சேர்த்தல்

15; "ஓம்" என்ற சொல்லில் காணப்படும் சொற்கள் யாவை?
அகர, உகர, மகரங்கள்

16. ஹரப்பா முத்திரையில் காணப்படும் சிவளின் பெயர் என்ன?
பசுபதி

17. மழைக்கு உரிய கடவுள் யார்?
வருணன்

18.மருதநில மக்களின் கடவுள் யார்7
இந்திரன்

19. நெய்தல் நில மக்களின் கடவுள் யார்?
வருணன்

20. முல்லை நில மக்களின் கடவுள் யார்?
திருமால்.

21. சைவம் என்பதன் பொருள் என்ன?
சிவசம்பந்தம் உடையது.

22.தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி என கூறியவர்"யார்?
மாணிக்கவாசகர்

23 .சைவத்தில் கூறப்படும் முப்பொருள் எது?
பதி, பசு, பாசம்

24. திருநாவுக்கரசரின் மற்றொரு பெயர் என்ன?
அப்பர்

25. திருநாவுக்கரசரின் சகோதரி யார்?
திலகவதியார்

26.பல்லவ மகேந்திரவர்மனை சைவத்திற்கு மாற்றியவர் யார் ?
திருநாவுக்கரசர்

27. திருஞான சம்பந்தா பிறந்த ஊர் எது?

சீர்காழி

28. பாண்டிய மன்னன் கூன்பாண்டியனை சைவத்திற்கு மாற்றியவர் யார் ?
திருஞான சம்பந்தர்

29 .சுந்தரர் பிறந்த ஊர் எது?
திருநாவலூர்

30. இறைவனை தன் நண்பளாக கருதிய சைவ அடியார் யார்?
சுந்தரர்

31. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது?
திருவாதவூர்

32. திருவெம்பாவை பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

33. அரிமார்த்த பாண்டியன் மாணிக்க வாசகருக்கு கொடுத்த பட்டம் என்ன?
தென்னவன் பிரம்மராயன்

34. திருக்கோவையாரின் ஆசிரியர் யார்?
மாணிக்கவாசகர்

35. திருவாசகத்தை இயற்றியவர் யார்?
மாணிக்கவாசகர்

36. தேவாரத்தை தொகுத்தவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

37. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?
திருமூலர்

38. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?
சேக்கிழார்

39. திருவுந்தியார் நூலின் ஆசிரியர் யார்?
தேவநாயனார்

40. திருக்களிற்றுப் பாடியார் நூலினை இயற்றியவர் யார்?
உய்யவந்த தேவநாயனார்

41.சிவஞான சித்தியார் நூலின் ஆசிரியர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்

12. சிவஞான போதம் என்னும் நூலை இயற்றியவர் யார்?
மெய்கண்ட தேவர்

43. வைணவ சமயத்தில் முழு முதற்கடவுளாக வணங்கப்பட்டவர் யார்?
விஷ்ணு

44. விஷ்ணு என்ற சொல்லின் பொருள் என்ன?
எங்கும் நிறைந்தவன்

45.விஷ்ணுவின் அவதாரங்கள் எத்தனை?
10

46.பிரமாணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
மூன்று, அவை பிரத்தியஷம், அனுமானம், சப்தம்

47. சப்த பிரமாணங்ளுள் சிறந்தது எது?
சுருதி பிரமாணம்

48. சுருதி எத்தனை வகைப்படும்.
நான்கு. அவைரிக்வேதம், யஜூர் வேதம், ஸாம வேதம், அதர்வன வேதம்

49. மனு முதலான மகான்கள் செய்த நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
ஸ்மிருதிகள்

50. இதிகாசங்கள் எவை?
இராமாயணம், மகாபாரதம்

51. இராமாயனத்தை இயற்றியா?
வால்மீகி

52. மகாபாரதத்தை இயற்றியவர் யார்?
வேத வியாசர்

53 இந்து மத நூல்களில் தலைசிறந்த ஞான நூலாக திகழ்வது எது ?
பகவத் கீதை

54.விஷ்ணு புராணத்தை எழுதியவர் யார்?
பாராசரர்

55.பிரம்ம சூத்திரங்களின் உண்மை கருத்தை உள்ள படிஉணர்த்தும் ஒப்பற்ற உயரிய நூல் .எது?
ஸ்ரீ பாஷ்யம்

56.விஷ்ணுவின் பத்தாவது அவதாரம் எது?
கல்கி

57.அர்சுணனுக்கு கீதோபதேசம் செய்தது யார்?
கிருஷ்ணர்

58.இறைவன் மூன்றடியால் உலகளந்த அவதாரத்தின் பெயர் என்ன?
வாமனாவதாரம்

59.நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர் யார்?
நாதமுனி

60.நாலாயிர திவ்விய பிரபந்தம் எத்தனை பாடல்களை உடையது?
4000

61.திருப்பாவை பாடியவர் யார்?
ஆண்டாள்

62திருப்பாவையில் எத்தனை பாடல்கள் உள்ள?
30

63.பக்தி இயக்கம் தமிழகத்தில் யாருடைய காலத்தில் ஏற்பட்டது?
பல்லவர் காலம்

64.திருநாவுக்கரசர் யாரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்?
திலகவதியார்

65.தொண்டு செய்வதே மெய்யுணர்வு என்று கூறியவர் யா?
திருநாவுக்கரசர்

66.திருத் தொண்டத் தொகை பாடியவர்?
சுந்தரர்

67.மாணிக்கவாசகர் பின்பற்றிய மார்க்கம் எது?
ஞான மார்க்கம்

68.திருத்தொண்டர் புராணத்தை எழுதியவர் யார்?
சேக்கிழார்

69.ஆதி சங்கரர் எங்கு பிறந்தார்?
காலடி (கேரளா)

70.அத்வைதம் என்ற மதத்தை ஏற்படுத்தியவர் யார்?
ஆதிசங்கரர்

71.காஞ்சியில் உள்ள காமகோடி பீடத்தை ஏற்படுத்தியவர் யார்?
சங்கரர்

72.விவேக சூடாமணி என்ற நூலை எழுதியவர் யார்?
ஆதி சங்கரர்

73.இராமனுஜர் எங்கு பிறந்தார்?
ஸ்ரீ பெரும்புதூர்

74.இராமானுஜர் என்பதன் பொருள் என்ன?
இராமனின் இளைய தம்பி

75. இராமானுஜர் பரப்பிய மதத்தின் பெயர் என்ன?
விசிஷ்டாத்வைதம்

76.தாழ்ந்த குலத்தோரை "திருக்குலத் தோர்" என்று அழைத்தவர் யார்?
இராமானுஜர்

77. துவைத மதத்தை பரப்பியவர் யார்?
மத்து வாச்சாரியார்

78.கிருஷ்ணனை புகழ்ந்து இராஜ்தானி மொழியில் பாடல்களை இயற்றியவர் யார்?
மீராபாய்
79.திலகதியார் எங்குள்ள சிவனை வழிபட்டார்? .
திருவதிகை சிவன் கோவில்

80.கந்த புராணத்தை பாடியவர் யார்?
கச்சியப்ப சிவாச்சாரியார்

81."வாடிய பயிரை காண்போதெல்லாம் வாடினேன்" என்று கூறியவர்?
இராமலிங்க அடிகளார்

82.சடகோபன் என்ற அழைக்கப்படும் ஆழ்வார் யார்?
நம்மாழ்வார்

83.நாயன்மார்கள் எத்தனை பேர்?
63 பேர்
84." ஆலயம்" என்பதன் பொருள் என்ன?
கடவுளது திருவடியில் ஆன்மா சேருவதற்கு உரிய இடம்.

85.சேஷத்திரம் சரீரப்பிரஸ்தாரம் என்பதன் பொருள் என்ன?
ஆலயம் மனிதர் உடம்பு போல அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன்பொருளாகும்.

86.உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் என்று கூறியவர் யார்?
திருமூலர்

87விமானங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. நாகரம், திராவிடம், வேசரம்

88.இறைவன் கொண்ட அருவுருவத் தோற்றம் எது?
சிவலிங்கம்.

89"நந்தி" என்பதன் பொருள் என்ன?
எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பவர்.

90.சிவபெருமானின் குருவடிவும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
தீட்சிணா மூர்த்தி
91.ஞானத்தை கையால் காட்டும் அடையாளம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
சின் முத்திரை

92.இரத்தின சபை எங்குள்ளது?
திருவாலங்காடு

93.பூஜைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
இரு வகைப்படும், ஆத்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை.

94ஆலயங்களில் இறுதியாக யாருடைய வழிபாடு அமைக்கப்படுகிறது?
சண்டேசுவரர்

95.இறைவனுக்கு பூஜையில் செய்யப்படும், பதினாறு உபசாரங்களின் பெயர் என்ன?
சோட சோபசாரங்கள்

96.நாராயணன் கையில் இருக்கும் சங்கின் பெயர் என்ன?
பாஞ்ச ஜன்யம்

97ஆலயங்களில் நிலை நிறுவப் பெற்றிருக்கும் திருவுருவங்களின் பெயர் என்ன?
விக்கிரகம்

98.நாலாயிர திவ்வியம் பிரபந்த, பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
திவ்விய தேசம்

99.ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட ஆலயங்கள் எத்தனை?
108

100.சிவபெருமான் புரிந்த எட்டு வீரச் செயல்களைக் தன்னகத்தே கொண்ட தலங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அட்ட வீரமடங்கள்

101.காயத்திரி மந்திரத்தின் பொருள் என்ன?
ஜபிப்பவனை இரட்சிப்பது

102.காரத்திகை விழாவிற்குச் சிறந்த இடமாய் விளங்குவது எது?
திருவண்ணாமலை

103.மார்கழித் திருவாதிரைக்கு சிறந்த இடமாகத் திகழ்வது எது?
சிதம்பரம்

## குரு

பரமகுரு ஆதிசங்கரர் தன் நான்கு சீடர்களுடன் குரு ஆனவர் கூறும் தர்மம் மற்றும் வேத புராணங்களின் கூற்று போன்றவற்றை வாழ்வின் முக்கிய வழியாக ஏற்று கொண்டு அதன் படி நடப்பவருக்கு குரு என்றும் உயர்ந்தவராகவே தெரிவார். நாம் அனைவரும் கூட குரு ஆவோம் அன்றாட வாழ்வில் எதாவது ஒன்றை போதிப்பதும் பயில்வதும் நம் இயல்பாக உள்ளது. குரு எங்கயும் இருப்பார் .**குரு** (சமசுகிருதம்:என்பதுபெரும்பாலும் இந்து, சமணம், பௌத்தம் மற்றும் சீக்கிய சமய மரபுகளில் ஒரு அறிவு துறையில் "வழிகாட்டி ஆசிரியர், நிபுணர்" என்பவரைக் குறிக்கிறது.

குரு தன் குருகுலத்தில் உள்ள சீடர்களுக்கு ஆன்மீக மற்றும் பல்துறை அறிவை போதிப்பவர்குருச்சேத்திரப்போர்க்களத்தில் ஸ்ரீகிருஷ்ணர், அருச்சுனனுக்கு குருவாக இருந்து பகவத் கீதையை புகட்டியதின் வாயிலாக குருவின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்.அறிவுடன் கூடிய சீடன் குருவிற்கு பணிவிடைகள் செய்வதன்

மூலம், ஆத்ம தத்துவத்தை நன்கு அறிந்த மகாத்மாவும் ஞானியுமான குருவிடமிருந்து பிரம்ம தத்துவத்தை அறிந்து கொள்வான்.

*ஆன்மீககுரு* வை *சற்குரு* என்றும், **பரமகுரு** என்றும்,சுவாமி என்றும், *சத்புருஷன்* என்றும் அழைப்பர்..குருவை பின்பற்றுபவர்கள் சீடர்கள் ஆவர். குரு தனது (குரு குலத்தில்) சீடர்களுடன் தங்கி ஆன்மீகக் கல்வி அறிவை புகட்டுவார். குருவின் பரம்பரை தனது சீடர்களால் நீட்சி அடைகிறது. அதனை குரு பரம்பரை என்பர்.

இந்து சமய மரபுகளில் குருவானவர், சுருதி ( வேதம்) எனப்படும் வேத மந்திரங்கள், வேதாந்தம், ஸ்மிருதி எனப்படும் பிரம்ம சூத்திரம், யோகா, சமயச் சடங்குகள், கர்மயோகம், தாந்திரீகம், பக்தி, ஞானயோகம், இலக்கணம், மீமாம்சை, நியாயம், இதிகாசம் மற்றும் புராணங்கள் போன்ற ஆன்மீக கல்வியுடன் அரசியல் நுட்பம், அரச தந்திரம், அரச தர்மம், சோதிடம், வானவியல், ஆயுர்வேத மருத்துவம், சமூகச் சட்டங்கள் போன்ற வாழ்க்கைக்கு தேவையான விடயங்களையும் சீடர்களுக்கு வாய்மொழியாக போதிப்பார். சீடர்களின் மனதில் உள்ள அறியாமை எனும் இருளை அகற்றி, ஞானம் எனும் ஒளியை ஏற்றுபவரே குரு ஆவார். இந்து சமயத்தில் குரு மிகவும் மதிக்கத் தக்கவராக விளங்குகிறார். மனுஸ்மிருதி குருவை, சீடனின் பெற்றோர்களுக்கு நிகராகவே போற்றுகிறது.இந்திய பண்பாட்டின்படி, குருவை அடையாத ஒருவனை அனாதை அல்லது அதிர்ஷ்டம் இல்லாதவன் என்று குறிப்பிடுகிறது. அனாதை என்பதற்கு சமசுகிருதம் மொழியில் குருவை அடையாதவன் என்பர். குரு சீடனுக்கு அறிவை வழங்குபவர் மட்டும் அல்ல தீட்சையும் வழங்குபவர் ஆவார். மேலும் சீடனுக்கு ஆத்ம ஞானத்தை ஊட்டி விதேக முக்திஅடைய வழிகாட்டுபவர் குருவே.

*ஆன்மீக குரு*வின் முக்கியத்துவம் உபநிடதங்களில் அதிகமாக காணப்படுகிறது. உபநிடதங்களில் குருவானவர் இறைவனுக்கு நிகராக போற்றப்படுகிறார். குருவின் நினைவை போற்றும் விதமாக குரு பூர்ணிமா விழா ஆண்டு தோறும் சீடர்கள் கொண்டாடுகிறார்கள். மேலும் குருமார்கள் மழைக்காலத்தில் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொள்கின்றனர்.

குருவின் பட்டங்கள்

கல்வி கற்றுத் தரும் குருவை மட்டுமின்றி, குருவின் குருக்களையும் சில அடைமொழிகளுடன் போற்றி வணங்கும் மரபு சீடர்களுக்கு உள்ளது. தகுதிக்கேற்ப ஆன்மீக குருவை சில அடைமொழிகளுடன் அழைக்கப்படுவது இந்து சமய மரபு. அவைகள் சில கீழ்கண்டவாறு:

- **குரு** - சீடர்களுக்கு தற்போது கல்வி கற்றுத் தரும் குரு.
- **பரம குரு** - ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை கொண்ட " குரு - சீட" மரபை நிலைநாட்டிய குரு. ( எ. கா., ஆதி சங்கரர், அத்வைத மரபை தன் சீடர்கள் மூலம் நிலைநாட்டிய பரம குரு).
- **பராபர குரு** (Parātpara-Guru) – பல்வேறு தத்துவங்களைக் கொண்ட குரு – சீட மரபுகளை தோன்றுவதற்கு ஆதாரமாக இருந்தவர் மகாகுரு (எ.கா., வேத வியாசர்). {வியாசர், அத்வைதம், துவைதம் மற்றும் விசிஷ்டாத்துவைதம் போன்ற மரபுகள் இந்து சமயத்தில் தோண்றக் காரணமாக இருந்தவர்.

## இந்து சமயம்

**இந்து சமயம்** (ஆங்கிலம்: *Hinduism*) இந்திய துணைக்கண்டத்தில் தோன்றிய, காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஏறக்குறைய 950 மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது.பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலும், நேபாளத்திலும் வசிக்கின்றார்கள். இலங்கை, இந்தோனேசியா, மலேசியா , சிங்கப்பூர், சுரினாம், பிசி தீவுகள், அமெரிக்கா, கனடா மற்றும் பிற பல நாடுகளிலும் இந்துக்கள் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் வசிக்கின்றார்கள்.

பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனை நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம்.ஆகக்குறைந்தது, . 1700ஆண்டுக்குஅணித்தான வேத காலப் பண்பாட்டில் தோற்றம் பெற்றது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இந்து சமயக் கடவுளில் ஒருவரான சிவனின் உருவ அமைப்பு கொண்ட சிலைகள், ஓவியங்களின் ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

முக்கியமாக, நம்பிக்கை, அன்பு, உறுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எல்லாவிதமான சமயச் செயற்பாடுகளும், இறுதியாக ஒரே தன்னுணர்வு நிலைக்கே இட்டுச் செல்கின்றன. அதனால்தான் இந்து சமயச் சிந்தனைகள் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கின்றன.

சொல்லிலக்கணம் மற்றும் சொல் வரலாறு

' இந்து' என்ற சொல் ' சிந்து' (Sindhu) என்ற சமசுகிருதச் சொல்லிலிருந்து ஈரானிய மொழியான பாரசீக மொழி மூலமாக உருவான ஒரு சொல் ஆகும். இந்து என்ற சொல் முதன்முதலில் பாரசீகத்தினரால் ஒரு புவியியல் சொல்லாக, அதாவது ' சிந்து நதிக்குக் கிழக்குப் பக்கம் வசிக்கும்' அனைவரையும் சேர்த்துக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறு பாரசீகர்களால் பயன்படுத்தப்பட்ட காலத்தில் இந்த இந்து எனும் சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தைக் குறிக்காமல் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை (இடத்தைக்) குறிப்பதாகவே இருந்தது. சவகர்லால் நேரு 1946இல் எழுதிய " இந்தியாவை அறிந்துகொள்தல்" ( *The Discovery of India* ) எனும் நூலில் இதைக் குறிப்பிடுகிறார். சிந்து நதிக்குக் கிழக்கில் இருந்த பகுதிகளைக் குறிக்கப் பயன்பட்ட இந்து என்கிற பாரசீகச் சொல்லிலிருந்து அரேபிய மொழியில் உருவான சொல்லான *அல்-இந்த்* என்பதிலிருந்து ஐரோப்பிய மொழிகளில் வழக்கத்தில் வந்த சொற்கள் இந்தீ (Indie), இந்துஸ்தான் போன்றவை ஆகும்.13ஆம் நூற்றாண்டில் தற்கால இந்தியத் துணைகண்டத்தின் நிலப்பகுதியைக் குறிக்க *இந்துசுதான்* (சிந்து நதியின் சுதானம்) எனும் பாரசீகச் சொல்வழக்கு மிகவும் பிரபலமடைந்தது. பின்னர், இந்துக்கா ( *Hinduka*) என்ற சொல் சில சமசுகிருத நூல்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிற்காலத்தில் இயற்றப்பட்ட கசுமீரின் இராசதரங்கினிகள் (Rajataranginis of Kashmir, Hinduka, c. 1450). இதில் இந்து என்ற சொல் 'இந்திய நிலத்தில் வாழ்பவர்களை யவனரிடமிருந்தும் மிலேச்சர்களிடமிருந்தும் (*Mleccha*) வேறுபடுத்திக் காட்டவே' பயன்படுத்தப்பட்டது.18ஆம் நூற்றாண்டு இறுதியில் ஐரோப்பிய வணிகர்களும் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களும் சிந்து நதிக்கு அப்பால் உள்ள அனைத்து மதத்தினரையும் சேர்த்துக் குறிக்க **இந்தூசு** (*Hindus*) என்ற சொல்லைப் பயன்படுத்தினர். 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழி அகராதியில் 'இந்து சமயம்' என்ற சொல் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அது இந்துக்கள் என்கிற பதத்திற்கு இந்திய நிலபரப்பில் தோன்றிய அனைத்து சமயம், மெய்யியல் மற்றும் கலாச்சார மரபுகளைச் சேர்த்துக் குறிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் இந்து என்ற சொல் இசுலாமியர்கள், சீக்கியர்கள், சைனர்கள், ( சமணர்கள்) மற்றும் கிறித்தவர்கள் ஆகியோரைத் தவிர ' மற்ற அனைவரையும்' குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

வரலாறு

இயற்கையின் நிகழ்வுகளான இடி, மின்னல், காட்டுநெருப்பு போன்றவற்றினைக் கண்டு பயந்த ஆதி மனிதன், அவற்றைக் கடவுள்களாக வழிபடத்தொடங்கினார்கள். இந்திர தேவன், சூரிய தேவன், சந்திர தேவன், அக்னி தேவன், வருண தேவன் என இயற்கையே முதல் கடவுளாகவும், இவற்றை இயக்குகின்ற சக்தியான பரம்பொருளாகவும் உணரப்பட்டது.

பல்வேறு முனிவர்களாலும், முன்னோர்களாலும் செவி வழியாகக் கடத்தப்பட்ட வேதம் எனும் வாழ்வியல் முறையை விளக்கமானது, நாகரீகம் வளர்ந்த பின் ஓலைச்சுவடியில் பதியப்பட்டது. இந்த வேதங்களில் உள்ள ரிசா, குபா, கரமு போன்ற ஆறுகள் ஆப்கான் தேசத்தினை சேர்ந்தவை என்பதால், சிந்து நதி நாகரீகம் அதுவரை பரவியிருந்ததாகக் கூறப்பெறுகிறது. இவ்வாறான வேதத்தினை முன்நிறுத்துகின்ற மதம் வேதமதமெனவும் அழைக்கப்பெறுகிறது.

வேதத்தின் உட்பொருளைக் கொண்டு எளிமையாக மக்களுக்குக் கூறுவதற்காக உபநிடதங்கள் உருவாயின. அதனினும் எளிமையாகக் கதைவடிவில் வேதம் மற்றும் உபநிடதங்களை விளக்குவதற்காகப் புராணங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இவற்றில் பதினெட்டு புராணங்கள் மகாபுராணங்கள் என்றும், சில உபபுராணங்கள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

ஆரியர்களின் வருகைக்கு முன்பு, ஏறத்தாழ 450 மதங்கள் இந்தியப்பகுதியில் இருந்துள்ளன. அவற்றோடு வேதமதம் இரண்டறக் கலந்து தற்போதுள்ள இந்து மதமாக அறியப்பெறுகிறது.

ஒரு சுருக்கமான மேலோட்டம்[தொகு]

இந்து சமயம் வேதங்களையும், தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மீக அடிப்படையில் தங்கியுள்ளது. வேத/தத்துவஞானப் பிரிவுகள், பக்தி யோகம், கர்ம யோகம் ஞான யோகம் மற்றும் யோகா, தந்திர ஆகமப் பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனையோட்டங்கள் அனைத்தும் இந்து சமயம் என்கின்ற ஒரே சமுத்திரத்திலே சங்கமமாகின்றன.

**சனாதன தர்மம்**

"சனாதன தர்மம்" அல்லது " நிலையான தத்துவஞானம்/இசைவு/நம்பிக்கை" என்பதே பல ஆயிரம் ஆண்டுகளாக இந்து சமயத்தைக் குறித்துவந்த பெயராகும். இந்துக்களைப் பொறுத்தவரை, இது, மனிதனால் உருவாக்கப்பட்டவற்றைக் கடந்து, தனிமனித விருப்பு வெறுப்புக்களைக் குறியாது, தூய உணர்வுபூர்வமான அறிவியலைக் குறிக்கும் சில ஆன்மீகக் கொள்கைகள் என்றும் நிலையானவையாக இருக்கின்றன என்ற எண்ணத்தைப் பற்றிப் பேசுகின்றது.

## யோக தர்மம்

இந்து சமயத்தில் பல வகையான தர்மங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம் ஆகியன முக்கியமானவை. இந்த யோகங்கள் இந்து மதத்தின் இரண்டு முக்கியமான தத்துவ நூல்களான பகவத் கீதை மற்றும் யோக சூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## வாழ்வின் நான்கு இலக்குகள்

இந்துக்கள் கொள்ள வேண்டிய தலையாய நான்கு இலக்குகளாக அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகியவை கருதப்படுகின்றன. அனைத்து உயிர்களும் இளமையில் பொருள், இன்பம் (உடல், உள்ளம், மற்றும் உணர்வு) ஆகியவற்றைத் தேடுதல் இயல்பு என்றும், மனம் முதிர்வடைந்தவுடன் இவற்றின் நெறிசார்ந்த தேடுதலை உயர்கட்டமைப்பான அறத்தின்கீழ் முறைப்படுத்துவரென்றும் கூறப்படுகிறது. இருந்தும், வாழ்வில் நிலையான யாவுங்கடந்த மகிழ்நிலையைத் தருவது வீடு, முக்தி, உய்வு, கடைத்தேற்றம் என்று பலவாறாக அழைக்கப்படும் பிறப்பு இறப்பற்ற விடுதலை நிலையேயெனக் கூறப்பட்டுள்ளது. இந்த நான்கு இலக்குகளில் அறம், வீடு ஆகியனவற்றை கரைகளாகவும், இன்பம், பொருள் ஆகியவற்றை அவற்றிடையே ஓடும் ஆறு எனவும் சிலர் நோக்குவர்.

இறைத்தொண்டு / சமூக சேவை

இறைத்தொண்டு என்பது கோவில்களைக் காப்பாற்றி அக்கோவில்களில் குடியிருக்கும் கடவுளுக்கான வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்வதும், கோவில்கள் இல்லாத ஊர்களில் கோவில்கள் கட்டி வழிபாடுகள் ஏற்பாடு செய்வதும், பல ஊர்களில் சேதப்பட்டிருக்கும் கோவில்களைப் புனரமைத்து வழிபாடு முறைகளைத் தொடரச்செய்வதும் ஆகும். மக்கள் சேவை என்பது, ஏழை மக்களுக்கும், இல்லாத/இயலாத மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து, கல்விச்செல்வம் ஆகியனவற்றை அளிப்பதும் ஆகும்.

## இந்து மத பிரிவுகள்

இந்துமதத்தில் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறு பிரிவுகள் உள்ளன.

1. சைவம் - சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்
2. வைணவம் - விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

3. சாக்தம் - உமையை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்
4. காணாபத்தியம் - கணபதியை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்
5. கௌமாரம் - முருகனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்
6. சௌரம் - சூரியனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

பொதுவாக, இது சைவம், வைணவம் மற்றும் சாக்தம் ஆகிய 3 பிரிவுகளாகக் கருதப்படுகிறது.காணாபத்தியம் மற்றும் கௌமாரம், சைவ சமயத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. சௌரம் வைணவ சமயத்தின் ஒரு பகுதியாகும்.[20][21]

**வர்ணம்**

*வேதாந்த காலத்தில்* வர்ணங்கைளை அடிப்படையாகக் கொண்டு குணங்களும் வகுத்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. இதன்படி **சத்துவ குணம்**- அமைதி, **இராட்சத குணம்**- மூர்க்கம் மற்றும் ஆர்வமிக்கவர், கிளர்ச்சி குணம். **தாமச குணம்**-சிரத்தையற்ற, குறை குணமுள்ளவர்கள், மந்த குணம், சோம்பல் என்ற மூன்று குணங்களாகப் பிரித்துக் கொண்டனர்.

- பிராமணர் - மிகு சாத்வீகம் (சத்துவ குணம்).
- சத்திரியர்-குறை சாத்வீகம்- அதிக ராசசீகம் இராட்சத குணம், குறை தமாசீகம்.
- வைசியர்-சாத்வீகமற்றவர், குறை ராசசீகம், அதிக தாமாசீகம்.
- சூத்திரர்-சாத்வீகமற்றவர், ராசசீகமற்றவர், தாமசீகம் மட்டும் தாமச குணம்.
-

**ஆசிரமம் (நான்கு நிலைகள்)**

இந்து மதம் வழமையான வாழ்க்கையை நான்காகப் பிரிக்கின்றது. இவை ஆசிரமம் என்று அழைகப்பெறுகின்றன. அவையாவன,.

1. பிரம்மச்சர்யம்
2. கிரகசுதம்
3. வனப் பிரசுதம்
4. சந்நியாசம்

**அகிம்சை**

தாவரங்கள் மற்றும் மனிதர் அல்லாத உயிரினத்திடமும் அன்பு பாராட்டுவதும், உயிர்களுக்குத் துன்பம் தராமல் இருப்பதுவும் அகிம்சைக் கொள்கையாகும். இந்து சமய நெறிகளை விளக்கும் உபநிடதங்களிலும், இதிகாசமான மகாபாரதத்திலும் இந்த அகிம்சைப் பற்றிக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

**சைவ உணவு பழக்கம்**

அகிம்சைக் கொள்கைப்படி உயிர்களை வதைத்தலை தவிர்க்கும் பொருட்டு சைவ உணவுப் பழக்கத்தினை பல இந்துகள் கடைபிடிக்கின்றனர்.

**தெய்வ உருவங்கள்**

- ஆயுதங்கள் (சூலம் போன்றவை)
- விலங்கு-மனிதன் (காமதேனு, விநாயகர் போன்றவை)
- ஆண்-பெண் (அம்மையப்பர்)

**பிரிவினைகள்**

**இருபிரிவு**

இதன் வளர்ச்சியில் சிவன், திருமால் வழிபாடுகள் தனித்தனியே பிரிந்தன. சிவனை வழிபடுவோர் சைவர். தென்னாடுடைய சிவன் என இவர்கள் தம் தெய்வத்தைப் போற்றினர். குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த நாடு கடற்கோளில் அழிந்துபோனதால் பிற்காலத்தில் சிவனை அழிக்கும் தெய்வமாக்கினர். அழிக்கும் தீ நிறத்தானைப் 'பொன்னார் மேனியன்' என்றனர். மை நிறம் கொண்ட மாயோனைக் காக்கும் கடவுள் என்றனர். தொல்காப்பயம் மாயோனை முல்லைநிலத் தெய்வம் என்கிறது.

**முப்பிரிவு**

படைக்கும் தெய்வம் என ஒன்றை உருவாக்கி அயன் என்றனர். அயன், அரி, அரன் (பிரமா, விட்டுணு, சிவன்) என்றனர்.

**பலவகைப் பிரிவு**

உருவ வழிபாட்டில் பல்வகைத் தெய்வங்கள் தோன்றின

பெண் தெய்வ வழிபாடு சாத்தம் (சாக்தம்)

இப்படி மனம் போன போக்கில் தெய்வங்களின் எண்ணிக்கை பெருகிற்று.

**தன்னிலை விளக்கம்**

தன்னையும் இறைவனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது தன்னிலை விளக்கம். சீவாதமாவைப் பரமாத்மாவோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தன்னிலை விளக்கம். உடலுயிரைத் தனியுயிரோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தன்னிலை விளக்கம்.

- தான் வேறு, இறைவன் வேறு என்னும் அடிப்படையில் பிரிவினைப் பாகுபாடுகள் தோன்றின.

இறைவனைத் தன்னோடு ஒப்பிட்டுப்பார்த்த மதாச்சாரியர்கள் பிற்காலத்தில் தோன்றினர்

**தன்னிலை விளக்கச் சுருக்கம்**

**மத ஆச்சாரியர்கள்**

1. அத்துவைதம் ( அ+த்வா நெறி) - தெய்வத்துக்குள்ளே தான், தனக்குள்ளே தெய்வம் (பரமாத்மாவும் சீவாத்மாவும் ஒன்று) எனக் கண்டவர் எட்டாம் நூற்றாண்டு, கேரள மாநிலம் காலடி என்னும் ஊரில் பிறந்த ஆதி சங்கரர். இவரது கோட்பாட்டைக் காஞ்சிபுரத்தை அடுத்த கலவை என்னும் ஊரில் பிறந்த சங்கரர் பின்பற்றினார். இவரது காலம் பொ.ஊ. 9ஆம் நூற்றாண்டு.
2. விசிட்டாத்துவைதம் - இறைவன் நமக்குள் ஒன்றியும், நம்மிடமிருந்து பிரிந்தும் நம்மை ஆட்டிப்படைக்கிறான். இராமானுசர். இவரது காலம் 12ஆம் நூற்றாண்டு.
3. துவைதம் நெறி - இறைவன் ( பிரமம்) தனித்து நின்று இயக்குகிறான்.மத்துவர் கோட்பாடு. இவரது காலம் 14ஆம் நூற்றாண்டு.

## தேவாரம்

கரூர் மாவட்டம் நந்தமேடு வீரபாண்டீசுவரர் கோயிலில் உள்ள நால்வர் சிலைகள். இடமிருந்து வலமாக ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர். **தேவாரம்** என்பது சைவ சமய கடவுளான சிவபெருமான் மீது பாடப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் ஆகும். இந்த ஏழு திருமுறைகளை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய நாயன்மார்கள் தமிழில் பாடியுள்ளார்கள்.

பாடலாசிரியர்கள்

முதல் இருவரும் பொ.ஊ. 7ஆம் நூற்றாண்டிலும், மூன்றாமவர் பொ.ஊ. 8ஆம் நூற்றாண்டிலும் இவற்றைப் பாடியதாகக் கருதப்படுகிறது. தேவாரங்கள் பதிக வடிவிலே பாடப்பட்டுள்ளன. பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. பொ.ஊ. 7 ஆம் நூற்றாண்டு, தமிழ்நாட்டிலே பல்லவர் ஆட்சி பலம் பெற்றிருந்த காலமாகும். மிகவும் செல்வாக்குடனிருந்த பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களுக்கெதிராகச் சைவ சமயம் மீண்டும் மலர்ச்சி அடையத்தொடங்கிய காலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் தோன்றி ஊரூராகச் சென்று சமயப் பிரச்சாரம் செய்தனர். சென்ற இடங்களிலெல்லாம் இருந்த கோயில்கள் மீது தேவாரங்களைப் பாடினர். திருஞானசம்பந்தர் தனது மூன்றாவது வயதில் தேவாரங்களைப் பாடத்தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. இவர் தனது சொந்த ஊரான சீர்காழியிலுள்ள தோணியப்பர் மீது, "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் அவரது முதற் பதிகத்தைப் பாடினார்.

தெய்வங்கள் மீது பாடப்பட்ட ஆரம்(பாமாலை) என்பதால் தேவாரம் என்று பெயர்பெற்றதாகக் கூறுவர்.ஆனால், இசையியலில் *வாரம்* என்பது நடையை ( இசை வேகம்) குறிக்கும் சொல்லாகும். வாரநடை என்பது முதல் நடை, இரண்டாம் நடையில் பாடுவது என்பதையே குறிக்கிறது.“பொன்னார் மேனியனே”, “ தோடு டைய செவியன்” பாடல்களை, ஓதுவார்கள் முதல் நடையில் தான் பாடுகிறார்கள். முதல் நடையில் ஓரெழுத்தாக பாடுவதையே, முதல்நடை என்பர்.திருவதிகை வீரட்டானம் என்னும் தலத்தில் பாடிய " கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கும் பதிகமே அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசரின் முதற் பதிகமாகும். " பித்தா பிறைசூடி" என்று தொடங்கும் தேவாரம் சுந்தரரின் முதற் பதிகம்.

பொ.ஊ. 10ம்நூற்றாண்டில் இராஜராஜசோழனின் ஆட்சியின்போது, சிதம்பரம் கோ யிலிலே கவனிப்பாரற்றுக் கிடந்த தேவாரங்களையும், வேறுபல சமய இலக்கியங்களையும் எடுத்து,பூச்சிகளால்அரிக்கப்பட்டுஅழிந்தவைபோகஎஞ்சியவற்றை, நம்பியாண்டார்நம்பி என்பவர்பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுத்தார்.

**சுந்தரர் தேவாரம்**

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பாடல்களை சுந்தரர் தேவாரம் என்று அழைக்கின்றனர். இப்பாடல்களை திருப்பாட்டு என்றும் அழைப்பது வழக்கம் இப்பாடல்களை பன்னிரு திருமுறைகளிலும், தேவாரத்திலும் இணைத்துள்ளார்கள்.

இவர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் 38000 என்று கூறுகின்றனர். இவை பண்கனோடு அமைந்துள்ளன. அதனால் பண் சுமந்த பாடல்கள் என்றும் கூறுகின்றனர். இவற்றில் 100 பதிகங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 17 பண்கள் இடம்பெற்றுள்ளன.தேவாரங்களில் செந்துருத்திப் பண் கொண்டு பாடல்பாடியவர் இவரே. தேவாரங்களைப் பாடிய மற்ற இருவரான ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இந்தப் பண்ணில் பாடல்களை பாடவில்லை.

சுந்தரர் அருளிய திருப்பதிகங்களை ' திருப்பாட்டு' என்று அழைப்பது மரபு. இவர் அருளியவை முப்பத்து எண்ணாயிரம்; அவற்றில் கிடைத்த பதிகங்கள் 101.

தேவாரப் பதிகங்கள் தொகுக்கப்பட்ட முறை.

**பண்முறை:**

பண் வாரியாகத் திரட்டி ஒன்று முதல் ஏழு திருமுறையாக அடைவு செய்துள்ள முறை முதலாவதாகும். இது " பண்முறை" எனப்படும். தேவார ஆசிரியர் மூவருள் இயலிசைத் தமிழாகிய திருப்பதிகங்களை முதன்முதல் அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தர் ஆதலின், அவர் அருளிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், அவர்தம் கெழுதகை நண்பராய் விளங்கிய திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் நான்காம் திருமுறை – ஐந்தாம் திருமுறை – ஆறாந்திருமுறை என மூன்று திருமுறைகளாகவும், இவ்விரு பெருமக்களும் வாழ்ந்த காலப்பகுதியையொட்டிச் சில ஆண்டுகள் பிற்பட்டுத் தோன்றிய நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டன. இப்பெருமக்கள் மூவரூள் முறையே ஒவ்வொருவரும் அருளிச் செய்தத் திருப்பதிகங்களில் அமைந்த பண்களை வகைப்படுத்தி ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய திருப்பதிகங்களையும் ஏழு திருமுறைகளாக வகுத்தெழுதியது பழைய முறையாகும்.

**அடங்கன் முறை**

திருத்தலங்கள் வாரியாக மூவர் பாடல்களைத் தொகுத்து அடைவு செய்த முறை இரண்டாவதாகும். இது "அடங்கன் முறை" எனப்படும்.

**தலமுறை**

மூவரில் ஒவ்வொருவர் பதிகங்களையும் தனித்தனியாக வைத்துத் தலங்கள் வாரியாகத் தொகுத்து அடைவு செய்த முறை மூன்றாவதாகும். இது தலமுறை எனப்படும்.

தலமுறையென்பது, கோயில், திருவேட்களம் முதலாகத் திருப்பதிகக் கோவையிற் குறித்த முறையையொட்டித் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களையெல்லாம் தில்லைப் பெருங்கோயில் முதலாக வரிசைப்படுத்தி அத்தலங்களுக்குரிய தேவாரப் பதிகங்களை முற்குறித்த ஏழு திருமுறைப் பாகுபாட்டிற்கு ஏற்ப முறைபடச் சேர்த்து அமைத்த முறையாகும்.

**பாடியவாறு:**

பெரியபுராணத்தில் மூவரின் வரலாறுச் சேக்கிழார் கூறிவரும் போது, இன்ன பதிகம் – ஊர் எல்லையில் / இறைவன் திருமுன் / வலம் வரும்போது பாடப்பெற்றது என்று கூறி வருவதை அறியலாம். அதன்படி தேவாரம் பாடப்பெற்ற காலமுறைப்படி ஒரு தொகுப்பு இருந்தது என்று உறுதி செய்யலாம். சோழர் வரலாற்றில் அக்குறிப்பு உள்ளது. அதற்கு “பாடியவாறு” என்று பெயர்.

**தற்கால நடைமுறை**

தலமுறை, பண்முறை வகைகளில் பண்முறையமைப்பே பழைய ஏட்டுச்சுவடிகளில் இடம் பெற்றுள்ளது.மூவர் தேவாரப்பதிகங்களை ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கும் திருமுறைப் பகுப்புக்கு அடிப்படையாயமைந்தது இப்பண்முறையமைப்பே எனக் கருதல் பொருந்தும். பண்முறையமைப்பாகிய இதனை ஆதாரமாகக் கொண்டு நோக்கினால்தான் மூவர் திருப்பதிகங்களையும் முதல் ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கிய நம் முன்னோரது பகுப்பு இனிது விளங்கும். தேவாரத் திருப்பதிகங்களைத் தலமுறையில் அமைத்துப் பயிலும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதெனவே கருதவேண்டியுள்ளது. மூர்த்தி, தலம், திர்த்தம் என்பவற்றை முறையே கண்டு வழிபடும் விருப்புடைய சிவநேசச்செல்வர்கள், தாம் வழிபட விரும்பிய ஒவ்வொரு தலத்திற்கும் அமைந்த தேவாரத் திருப்பதிகங்கள் முழுவதையும் நாள்தோறும் முறையே பாராயணஞ் செய்தற்கு ஏற்ற வண்ணம் முறைப்படுத்தப்பெற்றதே இத்தலமுறைப் பகுப்பாகும். இப்பகுப்பு தில்லைப்பெருங்கோயிலை முதன்மைத் திருத்தலமாகக் கொண்டு அமைந்திருப்பது தேவார ஆசிரியர் மூவர் திருவுள்ளத்திற்கும் ஏற்புடையதாகும். இது சிவத்தலங்களெல்லாவற்றிற்கும் முதலில் வைத்துப் போற்றத்தகும்

சிறப்புடைய திருத்தலம் என்ற நோக்கத்துடன் தில்லைப் பெருங்கோயிலைப் பற்றி அம் மூவரும் உளமுவந்து பாடிய திருப்பாடற் குறிப்புகளால் நன்கு புலனாகும். இக்குறிப்பினை விளக்கும் முறையில் கோயில், திருவேட்களம், நெல்வாயில், கழிப்பாலை எனத் தொடங்கும் திருப்பதிகக் கோவை அமைந்திருத்தல்

அறியத்தக்கதாகும். மேற்குறித்த பண்முறை, தலமுறை என்னும் இருவகை முறைகளுள் தேவார ஆசிரியர் காலந்தொட்டு இடையீடின்றி வழங்கிவருவதும் சைவத்திருமுறைகள் பன்னிர்ண்டு என்ற பகுப்பிற்கு நிலைக்களமாக அமைந்ததும் பண்முறையே யாதலின் அம்முறையினைப் பின்பற்றித் தேவாரத் திருப்பதிகங்களின் அமைப்பினை நோக்குதல் ஏற்புடையதாகும்.

பண் அமைத்தவர்

இப்பொழுதுள்ளபடி தேவாரப் பாடல்களுக்குப் பண் அமைத்துக் கொடுத்தவர் இராசேந்திர பட்டணத்திலிருந்த ஒரு பெண்மணி என்று உ.வே.சாமிநாதய்யர் குறிப்பிடுகின்றார்.

தேவார காலத்து இசைக் கருவிகள்

1. யாழ் 2. வீணை 3. குழல் 4 கின்னரி 5, கொக்கரி 6. சச்சரி 7. தக்கை 8. முழவம் 9. மொந்தை 10.மிருதங்கம் 11. மத்தளம் 12. தமருகம் 13. துந்துபி 14 குடமுழா 15. தத்தலகம் 16. முரசம் 17. உடுக்கை 18. தாளம் 19 துடி 20. கொடுகொட்டி முதலியன. இவற்றுள், பல பண்டைக்கால முதலே தமிழகத்தில் இருந்தவை. தேவாரத்தில் காணப்படும் பெரும்பாலான பண்கள் தமிழ்நாட்டிற்கே உரியவை. அவை பண்டை இசை நூல்களில் (அழிந்துபோன நூல்களில்) கூறப்பட்ட இசை நுணுக்கம் பொருந்தியவை. அப் பண்களில் சில சிலப்பதிகாரத்துட் காணலாம். பல்லவப் பேரரசர் காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ்ப்பண்களும் தமிழ் இசையும் களிநடம் புரிந்தன என்பதற்குத் திருமுறைகளே ஏற்ற சான்றாகும்

2. மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை ஒவ்வொரு நிலைகளாகக் கடந்து வருகின்றான். அந்த படிநிலையை விஷ்ணுவின் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றிய அவதாரங்கள் எப்படி பிரதிபலிக்கின்றன என்று இங்கே பார்க்கலாம்.

## நாயன்மார்கள்

**நாயன்மார்கள்** என்போர் பெரியபுராணம் எனும்நூலில்குறிப்பிடப்படும் சைவ அடி யார்கள் ஆவார். நாயன்மார் எண்ணிக்கை அடிப்படையில் 63 நபர்கள் ஆவார்கள். சுந்தரமூர்த்தியார் திருத்தொண்டத் தொகையில் அறுபது சிவனடியார்கள் பற்றிய குறிப்பிட்டுள்ளார். அந்த நூலினை மூலமாக கொண்டு சேக்கிழார் பெரிய புராணத்தினை இயற்றினார். எனவே திருத்தொண்டத் தொகையை எழுதிய சுந்தரமூத்தியாரையும், அவரது பெற்றோர் சடையனார் - இசை ஞானியார் ஆகிய மூவரையும் நாயன்மார்களாக இணைத்துக் கொண்டார்.

நாயன்மார்களுக்குச் சிவாலயங்களின் சுற்றுபிரகாரத்திற்குள் கற் சிலைகள் வைக்கப்படுகின்றன. அத்துடன் அறுபத்து மூவரின் உலோகச் சிலைகளும் ஊர்வலத்தின் பொழுது எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த ஊர்வலத்திற்கு அறுபத்து மூவர் திருவீதி உலா என்று பெயர்.

## நூல்கள்

### திருத்தொண்டதொகை

### பெரியபுராணம்

இவர்களின் வரலாறு சேக்கிழாரால், பெரியபுராணம் என்ற பெயரில் எழுதப்பட்டது.

## நாயன்மாரின் பட்டியல்

நாயன்மாரை அறிமுகம் செய்து வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் பாடிய நாயன்மார் 60 பேர். 63 பேர் அல்ல. சுவாமிமலைக்குப் படி 60. ஆண்டுகள் 60. மனிதனுக்கு விழா செய்வதும் 60 வது ஆண்டு. ஒரு நாளைக்கு நாழிகை 60. ஒரு நாழிகைக்கு வினாடி 60. ஒரு வினாடிக்கு நொடி 60. இப்படி 60 என்றுதான் கணக்கு வரும். 63 என்று வராது. சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமான் அடி எடுத்துக் கொடுக்கப் பாடிய நாயன்மார் 60 பேர்தான். சுந்தரமூர்த்தி நாயனார் மறைவுக்குப் பின் 100 ஆண்டுகள் கழித்து நம்பி யாண்டார் நம்பி அடிகள் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய 60 நாயன்மாரைக் கொஞ்சம் விரிவாகப் பாடுகின்றார். அப்போது 60 நாயன்மாரைப் பாடி, அந்த 60 நாயன்மாரைப் பாடிக் கொடுத்த சுந்தரர், அவரைப் பெற்றுக் கொடுத்த அப்பா (சடையனார்), அம்மா (இசைஞானியார்) ஆகியோரைச் சேர்த்து 63 ஆக ஆக்கினார்.

| எண் | பெயர் | குலம் | பூசை நாள் |
|---|---|---|---|
| 1 | அதிபத்தர் | பரதவர் | ஆவணி ஆயில்யம் |
| 2 | அப்பூதியடிகள் | அந்தணர் | தை சதயம் |
| 3 | அமர்நீதி நாயனார் | வணிகர் | ஆனி பூரம் |
| 4 | அரிவட்டாயர் | வேளாளர் | தை திருவாதிரை |
| 5 | ஆனாய நாயனார் | இடையர் | கார்த்திகை ஹஸ்தம் |
| 6 | இசைஞானியார் | ஆதி சைவர் | சித்திரை சித்திரை |
| 7 | இடங்கழி நாயனார் | வேளிர்[4] | ஐப்பசி கார்த்திகை |
| 8 | இயற்பகை நாயனார் | வணிகர் | மார்கழி உத்திரம் |
| 9 | இளையான்குடிமாறார் | வேளாளர் | ஆவணி மகம் |
| 10 | உருத்திர பசுபதி நாயனார் | அந்தணர் | புரட்டாசி அசுவினி |

| எண் | பெயர் | குலம் | பூசை நாள் |
|---|---|---|---|
| 11 | எறிபத்த நாயனார் | மரபறியார் | மாசி ஹஸ்தம் |
| 12 | ஏயர்கோன் கலிகாமர் | வேளாளர் | ஆனி ரேவதி |
| 13 | ஏனாதி நாதர் | ஈழக்குலச்சான்றார் | புரட்டாசி உத்திராடம் |
| 14 | ஐயடிகள் காடவர்கோன் | காடவர்,பல்லவர் | ஐப்பசி மூலம் |
| 15 | கணநாதர் | அந்தணர் | பங்குனி திருவாதிரை |
| 16 | கணம்புல்லர் | செங்குந்தர் [5][6] | கார்த்திகை கார்த்திகை |
| 17 | கண்ணப்பர் | வேடர்/வேட்டுவர் | தை மிருகசீருஷம் |
| 18 | கலிய நாயனார் | செக்கார் | ஆடி கேட்டை |
| 19 | கழறிற்றறிவார் | சேரர்-அரசன் | ஆடி சுவாதி |
| 20 | கழற்சிங்கர் | பல்லவர்-அரசன் | வைகாசி பரணி |
| 21 | காரி நாயனார் | மரபறியார் | மாசி பூராடம் |
| 22 | காரைக்கால் அம்மையார் | வணிகர் | பங்குனி சுவாதி |
| 23 | குங்கிலியகலையனார் | அந்தணர் | ஆவணி மூலம் |
| 24 | குலச்சிறையார் | மரபறியார் | ஆவணி அனுஷம் |
| 25 | கூற்றுவர் | களப்பாளர் | ஆடி திருவாதிரை |
| 26 | கலிக்கம்ப நாயனார் | வணிகர் | தை ரேவதி |
| 27 | கோச்செங்கட் சோழன் | சோழர்-அரசன் | மாசி சதயம் |
| 28 | கோட்புலி நாயனார் | வேளாளர் | ஆடி கேட்டை |
| 29 | சடைய நாயனார் | ஆதி சைவர் | மார்கஇசைழி திருவாதிரை |
| 30 | சண்டேசுவர நாயனார் | அந்தணர் | தை உத்திரம் |
| 31 | சக்தி நாயனார் | வேளாளர் | ஐப்பசி பூரம் |
| 32 | சாக்கியர் | வேளாளர் | மார்கழி பூராடம் |
| 33 | சிறப்புலி நாயனார் | அந்தணர் | கார்த்திகை பூராடம் |
| 34 | சிறுதொண்டர் | மாமாத்திரர் | சித்திரை பரணி |
| 35 | சுந்தரமூர்த்தி நாயனார் | ஆதி சைவர் | ஆடிச் சுவாதி |
| 36 | செருத்துணை நாயனார் | வேளாளர் | ஆவணி பூசம் |

| எண் | பெயர் | குலம் | பூசை நாள் |
|---|---|---|---|
| 37 | சோமசிமாறர் | அந்தணர் | வைகாசி ஆயிலியம் |
| 38 | தண்டியடிகள் | செங்குந்தர் [7][8] | பங்குனி சதயம் |
| 39 | திருக்குறிப்புத் தொண்டர் | வண்ணார் | சித்திரை சுவாதி |
| 40 | திருஞானசம்பந்தமூர்த்தி | அந்தணர் | வைகாசி மூலம் |
| 41 | திருநாவுக்கரசர் | வேளாளர் | சித்திரை சதயம் |
| 42 | திருநாளை போவார் | பறையர் | புரட்டாசி ரோகிணி |
| 43 | திருநீலகண்டர் | குயவர் | தை விசாகம் |
| 44 | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | பாணர் | வைகாசி மூலம் |
| 45 | திருநீலநக்க நாயனார் | அந்தணர் | வைகாசி மூலம் |
| 46 | திருமூலர் | இடையர் | ஐப்பசி அசுவினி |
| 47 | நமிநந்தியடிகள் | அந்தணர் | வைகாசி பூசம் |
| 48 | நரசிங்க முனையர் | முனையரையர் | புரட்டாசி சதயம் |
| 49 | நின்றசீர் நெடுமாறன் | பாண்டியர் அரசர் | ஐப்பசி பரணி |
| 50 | நேச நாயனார் | சாலியர் | பங்குனி ரோகிணி |
| 51 | புகழ்சோழன் | சோழர்- அரசர் | ஆடி கார்த்திகை |
| 52 | புகழ்த்துணை நாயனார் | ஆதி சைவர் | ஆனி ஆயிலியம் |
| 53 | பூசலார் | அந்தணர் | ஐப்பசி அனுஷம் |
| 54 | பெருமிழலைக் குறும்பர் | குறும்பர் | ஆடி சித்திரை |
| 55 | மங்கையர்க்கரசியார் | பாண்டியர்-அரசர் | சித்திரை ரோகிணி |
| 56 | மானக்கஞ்சாற நாயனார் | வேளாளர் | மார்கழி சுவாதி |
| 57 | முருக நாயனார் | அந்தணர் | வைகாசி மூலம் |
| 58 | முனையடுவார் நாயனார் | வேளாளர் | பங்குனி பூசம் |
| 59 | மூர்க்க நாயனார் | வேளாளர் | கார்த்திகை மூலம் |
| 60 | மூர்த்தி நாயனார் | வணிகர் | ஆடி கார்த்திகை |
| 61 | மெய்ப்பொருள் நாயனார் | குறுநில மன்னர் | கார்த்திகை உத்திரம் |
| 62 | வாயிலார் நாயனார் | வேளாளர் | மார்கழி ரேவதி |

| எண் | பெயர் | குலம் | பூசை நாள் |
|---|---|---|---|
| 63 | விறன்மிண்ட நாயனார் | வேளாளர் | சித்திரை திருவாதிரை |

## வகைப்பாடு

காலம், குலம், நாடு, இயற்பெயர் - காரணப்பெயர் என பல வகைகளில் நாயன்மார்களை வகைப்படுத்துகிறார்கள். இவ்வாறான ஒப்புமை நோக்குமை நாயன்மார்களைப் பற்றிய புரிதல்களை அதிகப்படுத்த உதவுகின்றன. நாயன்மார்களின் வரலாறுகளை ஆய்வு செய்யவும், அவற்றில் உள்ள சேர்க்கைகளையும், உண்மைகளையும் புரிந்து நோக்கவும் இவ்வாறான வகைப்பாடு உதவுகின்றன.

**சமயக் குரவர்கள்**

நாயன்மாரில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும், நாயன்மார் வரிசையில் தனியாக இல்லாத மாணிக்கவாசகர் அவர்களும் முதன்மையானவர்கள். இந்த நால்வரும் சைவ சமய குரவர் என்று அழைக்கப்படுகிறார்கள். சைவத் திருமுறைகள் என அழைக்கப்படும் 12 திருமுறைகளின் தொகுதியில் நாயன்மாரின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தராலும், திருமுறைகள் 4,5,6 திருநாவுக்கரசராலும், 7 ஆம் திருமுறை சுந்தரராலும் ஆக்கப்பட்ட பண்ணோடு அமைந்த இசைப்பாடல்களாகும். நாயன்மாரில் சிலரே சமய நூல்களில் புலமை உடையவர்கள். மற்றவர்கள் மிகச் சிறந்த பக்தர்கள் மட்டுமே. பலரும் பல்வேறு தொழில்கள் செய்து உயிர்வாழ்ந்தவர்கள். இறையருள் பெற பக்தி மட்டுமே போதுமானது என்பதும் எல்லோரும் இறைவன் திருவடிகளை அடையலாம் என்பதுமே இவர்கள் வாழ்க்கை தரும் பாடமாக உள்ளது.

**நாயன்மாரில் பெண்கள்**

அறுபத்துமூன்று நாயன்மாரில் மூவர் பெண்கள். கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் நாயன்மாரில் காலத்தால் மூத்தவர். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராலேயே அறியப்படும் காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் ஆகும். மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாற நாயனார் என்ற அறியப்படுகிறார். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் என்பவர் நாயன்மாரில் மற்றொரு பெண் ஆவார். திருநாவலுரைச் சேர்ந்த சடையனார் என்ற நாயனாரின் மனைவி இசைஞானியார் மூன்றாவது பெண் நாயனார் ஆவார். இவர்களின் மகன் சுந்தரமூர்த்தியார் சைவக்குரவர் நால்வருள் ஒருவரும் நாயன்மாரில் ஒருவரும் ஆவார்.

**மரபு**

நாயன்மார்களை மரபு அடிப்படையில் நோக்கும் போது, அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், ஆதி சைவர், மரபுக்கொருவர், மரபு கூறப்படாதவர் என வகைப்படுத்துகின்றனர்.

**அரசர்**

- அரச மரபினர் - 12 பேர்
- சேரர் - சேரமான் பெருமான்
- சோழர் - கோச்செங்கட் சோழர், புகழ்ச் சோழர்
- பாண்டியர் - நெடுமாறர், மங்கையர்க்கரசியார்
- பல்லவர் - கழற்சிங்கர், ஐயடிகள் காடவர் கோன்
- களப்பாளர் - கூற்றுவ நாயனார்
- சிற்றரசர் - மெய்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர், பெருமிழலைக் குறும்பர், இடங்கழி நாயனார்

  சிற்றசர்கள்

  - மெய்பொருள் நாயனார் - திருக்கோவலூர் (நடுநாடு)
  - நரசிங்க முனையரையர் - திருநாவலூர் (நடுநாடு)
  - பெருமிழலைக் குறும்பர் - பெருமிழலை (சோழநாடு)
  - இடங்கழி நாயனார் - கொடும்பாளுர் (கோனாடு)

**நாடு**

நாடுகளில் அடிப்படையில் நாயன்மார்களை நோக்கும் போது பெருவாரியான அடியார்கள் சோழ நாட்டினை சேர்ந்தவர்களாக உள்ளார்கள். சேர, பாண்டிய நாடுகளோடு, மலைநாடு, தொண்டைநாடு, நடுநாடு, வடநாடு ஆகிய நாடுகளில் உள்ளோரும் நாயன்மார்களாக இருந்துள்ளார்கள். சோழ நாட்டிற்கு அடுத்தபடியாக தொண்டை நாட்டில் எட்டு நாயன்மார்கள் உள்ளார்கள்.

- சேர நாடு - 2 நாயன்மார்
- சோழ நாடு - 37 நாயன்மார்
- தொண்டை நாடு - 8 நாயன்மார்
- நடு நாடு - 7 நாயன்மார்
- பாண்டிய நாடு - 5 நாயன்மார்
- மலை நாடு - 2 நாயன்மார்
- வட நாடு - 2 நாயன்மார்

**முக்தி தலங்கள்**

நாயன்மார்கள் செய்த தொண்டின் காரணமாக மூன்று விதமான முறையில் முக்தி அடைந்ததாக நூல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் குருவருளால் முக்தி பெற்றவர்கள் பதினொரு நாயன்மார்கள், சிவலிங்கத்தால் முக்தி பெற்றவர்கள் முப்பத்து ஒரு நாயன்மார்கள், அடியாரை வழிபட்டமையால் முக்தி பெற்றவர்கள் இருபத்து ஒரு நாயன்மார்கள்.

**குருவருளால் முக்தியடைந்தவர்கள்**

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. திருமூலர்
4. நின்றசீர் நெடுமாறர்
5. மங்கையற்கரசியார்
6. குலச்சிறையார்
7. திருநீலகண்டயாழ்ப்பாணர்
8. பெருமிழலைக்குறும்பர்
9. கணம்புல்லர்
10. அப்பூதியடிகள்
11. சோமாசிமாறர்

**அவதாரத் தலங்கள்**

நாயன்மார்கள் பிறந்த தலங்களை நாயன்மார் அவதாரத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் ஐம்பத்தி எட்டு (58) தலங்கள் தமிழகத்தில் அமைந்துள்ளன. மற்றவை பாண்டிச்சேரி ( காரைக்கால்), ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் ஒன்று என்ற வீதத்திலும், கேரளா மாநிலத்தில் இரண்டு இடங்களிலும் அமைந்துள்ளன.

**நாயன்மார் தலங்கள்**

நாயன்மார்களுக்கு தனிக்கோயில்கள் அரசர்கள் காலத்தில் எடுக்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை இருபத்து ஒன்பதாகும்.

- இராஜேந்திர பட்டனம் திருநீலகண்ட யாழ்ப்பாணர் கோயில் - இராஜேந்திர பட்டனம் விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்
- சேங்கனூர் சண்டேசுர நாயனார் கோயில்- சேய்நல்லூர் - திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
- திருப்பெருமங்கலம் ஏயர்கோன் கலிகாம நாயனார் கோயில் - திருப்புன்கூர், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம்
- சாத்தனூர் திருமூலதேவ நாயனார் கோயில் - திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

மற்ற நாயன்மார்கள்

சைவ சமய குரவர் நால்வரில் ஒருவரான பொ.ஊ. 9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மாணிக்கவாசகர் நாயன்மார்கள் வரிசையில் வைக்கப்படவில்லை. எனினும்

இவரது படைப்பான திருவாசகம் திருமுறையின் எட்டாவது தொகுதியின் ஒரு பகுதியாக வைக்கப்பட்டுள்ளது. இலக்கிய மரபில் நாயன்மார்களின் எண்ணிக்கை 63 என்றாலும்,[9] தமிழ்ப் புலவரான திருவள்ளுவரை கவுரவிக்கும் வகையில் சைவ மரபு பல இடங்களில் அவரை 64 வது நாயன்மாராகப் போற்றுகிறது.இதன் அடையாளமாகவே மயிலாப்பூர், திருச்சுழி உட்பட பல்வேறு தென்னிந்திய சமூகங்கள் ஆண்டுதோறும் அறுபத்து மூவர் திருவீதி உலாவில் வள்ளுவரை அறுபத்து நாலாமவராக பூஜித்து ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றன.

## திருப்பாவை

**திருப்பாவை** பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். இது 30 பாடல்களால் ஆனது. வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 474 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும்.

தமிழ் நாட்டில் மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்றனர்.[1] இதன் போது விடியும் முன்பே எழும் கன்னியர், பிற பெண்களையும் துயில் எழுப்பிக்கொண்டு ஆற்றில் நீராடி இறைவனைத் துதித்து வழிபடுவர். இதனைப் பின்னணியாகக் கொண்டு எழுந்ததே இந்நூல். இதனால் தற்காலத்திலும் பாவை நோன்புக் காலத்தில் இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. இதன் இரண்டாம் பாடல், நெய் உண்ணமாட்டோம், பால் அருந்த மாட்டோம் என எவ்வித உணவு வகைகளையும் உட்கொள்ளாதிருத்தலையும், காலையிலே நீராடுவதையும், கண்ணுக்கு மையிடுதல், தலையைச் சீவி முடித்து மலர்களைச் சூட்டிக்கொள்ளுதல் முதலிய அழகூட்டும் வேலைகளைச் செய்யாதிருத்தலையும், செய்யத் தகாதனவற்றைச் செய்யாது அவற்றைத் தவிர்த்தலையும், தீக்குறளை ( தீயதான கோள்) சொல்லாதிருக்கையும், பிச்சை முதலியன இட்டு நற்செயல்களில் ஈடுபடுவதையும், இறைவனைப் பாடித் துதித்தலையும் பாவை நோன்பு காலத்தில் செய்ய வேண்டியனவாகக் கூறி அந்நோன்பு நோற்கும் விதத்தை விளக்குகிறது.

மூன்றாம் பாடல் அதனால் உண்டாகும் பயன்களையும் எடுத்துக் கூறுகிறது. நாடு முழுதும் மாதம் மும்மாரி பெய்யும், வயல்களில் நெற் பயிர் ஓங்கி வளரும். அவற்றிடையே கயல் மீன்கள் துள்ளும்; பசுக்கள் நிறையப் பால் கொடுக்கும்; எங்கும் நீங்காத செல்வம் நிறையும் என்பது அப் பயன்களாகும். பாடல்கள் அனைத்தும் இறைவனின் பெருமைகளைக் கூறி கன்னியரைத் துயில் எழுப்பும் பாங்கில் எழுதப்பட்டுள்ளன.

தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவை மன்னர் முடிசூட்டலின்போது பாடப்படுகின்றன.மார்கழி மாதத்தில் அனைத்து பெருமாள் கோயில்களிலும் சுப்ரபாதத்துக்குப் பதில் திருப்பாவை பாடப்படுகிறது.

**முதற்பாடல்**

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்

## திருப்பாவைச் சிறப்பு

வைணவ சமய வழிபாட்டில் ஒன்றறக் கலந்து விட்ட ஒன்று திருப்பாவையாகும். மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலைகளில் அனைத்து வைணவக் கோயில்களிலும் இசைக்கப்படுவதே இதன் பெரும் சிறப்பு. தமிழில் புனையப்பெற்ற பாடல்களே ஆயினும், தமிழறியா அடியார்கள் கொண்ட வைணவத் தலங்களிலும், மார்கழி மாதக் காலைகளில் திருப்பாவை இசைக்கப்படுவதும், இந்தியாவில் எங்கெல்லாம் பெருமானின் திருக்கோயில்கள் உள்ளனவோ அங்கெல்லாம், கோதை தனக்கும் ஒரு தனிச் சந்நதி கொண்டுள்ளதும் வேறு எந்த ஒரு அடியவருக்கும் காணப் பெறாத தனிச் சிறப்பாகும். மொழி வேறுபாடின்றி, வைகுந்த நாதனின் வழிபாட்டில் இந்தியக் கண்டம் முழுவதும் விரவிக் காணப்படுவது திருப்பாவைத் தொழுகை.

திருப்பாவையின் சிறப்பு, முதன்மையாக அதன் பக்திப் பெருக்கு மட்டுமல்ல. பாற்கோவை முழுவதும் விரவிக் கிடக்கும் கோதை, மாதவன் பாற்கொண்ட தூய காதலமுதம் மற்றும் அதன் விளைவாய் அடியவருக்கும் அனைவருக்கும் அரும்பெரும் வரமாகக் கிடைத்த தமிழ் மணம்.

**பன்னிரண்டு ஆழ்வார்கள்**

108 திவ்ய தேசத் திருத்தலங்களுக்குச் சென்று நம் பெருமானைச் சேவிக்கு முன் அவனைப் போற்றி, சரணடைந்து, அவனே கதியென்று வாழ்ந்த பன்னிரண்டு ஆழ்வார்களைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இந்த ஆழ்வார்கள் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்திருந்தாலும், அவர்கள் போற்றிப் பணிந்ததெல்லாம் ஒரே பரமனைத்தான். இந்த ஆழ்வார்கள் திருமாலின் அம்சமாகவே கருதப்படுகின்றனர். பெருமானைப் போற்றுவதும், மங்களாசாஸனம் செய்வதுமே அவர்களின் வாழ்க்கை

முறையாக அமைந்தது.இப்பன்னிருவரில்"மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று கண்ணனைச் சரணடைந்த ஸ்ரீ ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.

1) பொய்கைஆழ்வார்
2) பூதத்தாழ்வார்
3) பேயாழ்வார்
4) திருமழிசைஆழ்வார்
5) நம்மாழ்வார்
6) திருமங்கையாழ்வார்
7) தொண்டரடிப்பொடிஆழ்வார்
8) பெரியாழ்வார்
9) ஸ்ரீஆண்டாள்
10) குலசேகரஆழ்வார்
11) மதுரகவிஆழ்வார்
12) திருப்பாணாழ்வார்

இவர்களுள் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் மூவரையும் முதல் ஆழ்வார்கள் என்று குறிப்பது வழக்கம்.

**பொய்கைஆழ்வார்**

கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சித்தார்த்த வருடம் ஐப்பசி மாதம் 1 திருவோண நட்சததிரத்தில், காஞ்சீபுரத்தில் பிறந்தார். முதல் ஆழ்வார்களுள் ஒருவர். மஹாவிஷ்ணுவின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான திருச் சங்கின் அம்சமாக இவர் கருதப்படுகிறார். திருவெஃகா என்பது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி. விஷ்ணு காஞ்சி என்றழைக்கப்படும் இத்திருத்தலத்தில் யதோத்தகாரி என்ற பெருமாள் கோயிலின் பொய்கையில், இவர் ஒரு பொற்றாமரையில் அவதரித்ததாகவும், அதனாலேயே இவருக்குப் பொய்கையாழ்வார் என்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.

**பூதத்தாழ்வார்**

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில், கடல்மல்லை என்றழைக்கப்படுகின்ற தலத்தில் பொய்கையாழ்வாரின் காலத்திலேயே வாழ்ந்தவர். அதே சித்தார்த்த ஐப்பசி மாதம் அவிட்ட நட்சத்திரம் கூடிய நாளில் ஒரு நீலோற்பல மலரில் அவதரித்தார். கௌமோதகி என்ற கதை (முயனாயi) யின் அம்சமாகக் கருதப்படும் எம்பெருமான் ஸ்தலசயனப் பெருமானைத் துதித்துப் பாசுரங்கள் பல பாடியுள்ளார். முதல் ஆழ்வார்களுள் ஒருவர்.

**பேயாழ்வார**

திருமயிலை என்றழைக்கப்படுகின்ற மயிலாப்பூரில் கி.பி.7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சித்தார்த்த வருடம் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர். ஆதிகேசவப் பெருமாள் கோயிலின் குளத்தில் ஓர் செவ்வல்லி மலரில் அவதரித்தார் என்பது புராணம். ஸ்ரீமந் நாராயணின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான நாந்தகம் என்கின்ற வாளின் அம்சமாக இவர் கருதப்படுகிறார். முதல் ஆழ்வார்களுள் ஒருவர்.

**திருமழிசைஆழ்வார்**

எம்பெருமானைத் தம் நண்பனாகப் பாவித்துப் பல பாசுரங்கள் பாடியுள்ளார். இவர் அவதரித்தது திருமழிசை என்ற ஊரில். தை மாதம் மக நட்சத்திரத்தில் தோன்றினார். திருமழிசைப் பிரான் என்றழைக்கப்பட்ட இவர் எம்பெருமானின் சுதர்சன சக்கரத்தின் அம்சமாகக் கருதப்படுகிறார்.இவர் தன் வளர்ப்புப் பெற்றோருக்குப் பிறந்த கணிக் கண்ணனைத் தன் சீடனாக ஏற்று பொய்கையாழ்வார் வாழ்ந்த திருவெஃகா சென்று யதோத்தகாரிப் பெருமானை ஸேவித்து தியானம் செய்தார். பின்னர் கணிக்கண்ணனுடன் திருக்குடந்தை சென்று ஆராவமுதப் பெருமான் மீது பல பாசுரங்கள் இயற்றினார். திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்று பரமனின் மீது பல பாசுரங்கள் இயற்றினார்.

**நம்மாழ்வார்**

திருநெல்வேலிக்கருகில் உள்ள திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியில் கி.பி.9ம் நூற்றாண்டில் பிரமாதி வருடம், வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் அவதரித்தார். பிறந்து பல நாட்களுக்குப் பிறகும் கண்கள் மூடிய நிலையில் தாய்ப்பால் கூட அருந்தாமல் இருந்தார். ஆனால் நல்ல உடல் நலத்துடன் இருந்தார். வாயிலிருந்து ஒரு சொல் கூட வரவில்லை. சடகோபன் என்றும் அழைக்கப்பட்ட இக்குழந்தை இவ்வுலக ஆசா பாசங்களிலிருந்து விலகி இருந்தான். வைகுண்டத்தில் ஸ்ரீமந் நாராயணனின் அன்புக்குப் பாத்திரமான விஷ்வக்ஸேனனின் அம்சமாக நம்மாழ்வார் கருதப்படுகிறார். திருவரங்கனே தன் அன்பன் சடகோபனை `நம்மாழ்வார்' என்று அழைத்ததாக வரலாறு கூறுகிறது.இடைப்பட்ட 600 ஆண்டு காலத்தில் பல ஆழ்வார்களால் இயற்றப்பட்ட திவ்யப் ப்ரபந்தங்கள் வழக்கிலில்லாமல் போனதாகவும், திருநாத முனிகள் தம் தவமுயற்சியால் நம்மாழ்வாரை யோகநிலையில் தொடர்பு கொண்டு பாசுரங்களுக்குப் புத்துயிர் அளித்துப் பெருமாள் கோயில்களில் இசைக்க வைத்ததாகவும் கூறுவர். திருவிருத்தம், திரு ஆசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, எனும் நான்கு தமிழ் மறைகளை வழங்கினார் நம்மாழ்வார். இவற்றில் வைணவத்தின் பொக்கிஷமாகக்

கருதப்படும் திருவாய்மொழி 1102 பாசுரங்களைக் கொண்டது.

**திருமங்கையாழ்வார்**

சோழநாட்டில் திருமங்கை மன்னனாக இருந்து பின் இறைவனின் தொண்டனாகி எம்பெருமானின் அடியவர்க்காக வாழ்ந்தவர். 8வது நூற்றாண்டில் சோழவளநாட்டில் திருக்குறையலூர் என்ற ஊரில் நளவருடம், கார்த்திகை மாதம், கிருத்திகை நட்சத்திரத்தில் அவதரித்தார். பெற்றோர் இவருக்கிட்ட பெயர் நீலன்.

இவர் எம்பெருமானின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான சார்ங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கருதப்படுகிறார். மணமக்கள் கோலத்தில் ஸ்ரீமந்நாராயணன் லட்சுமி தேவியுடன் இவருக்குக் காட்சியளித்து ஓம் நமோ நாராயணா என்ற எட்டெழுத்து மந்திரத்தின் பொருளுரைத்ததாக "வாடினேன் வாடிவருந்தினேன்... நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்," என்ற பாசுரத்தின் மூலம் அறிகிறோம். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்ககூற்றிருக் கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற ஆறு பிரபந்தங்களில் 1137 பாசுரங்களாக இயற்றியுள்ளார்.

**தொண்டரடிப்பொடிஆழ்வார்**

எம்பெருமானின் அடிமையாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு பரமனை மாலைகள் அணிவித்துப் பார்த்து விப்ர நாராயணராக வாழ்ந்தவர். சோழநாட்டில் திருமண்டங்குடி என்ற சிற்றூரில் பராபவ வருடம், மார்கழி மாதம், கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தார். பெருமானின் வைஜயந்தி வனமாலையின் அம்சமாகக் கருதப்படும் இவர் திருவரங்கனைத் தம் பாசுரங்களால் பாடித் துதித்து மற்ற திவ்ய தேசக் கோயில்களுக்கும் விஜயம் செய்தார். ஸ்ரீமந் நாராயணனின் பக்தர்களின் காலடி மண்ணைத் தம் தலையிலிட்டுக் கொண்டு தொண்டரடிப்பொடி என்ற பெயர் பெற்றார்.

**பெரியாழ்வார்**

ஸ்ரீவில்லிப்புத்தூரில் கி.பி.9ம் நூற்றாண்டில், குரோதன வருடம், ஆனி மாதம், சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தார். கருடாழ்வாரின் அம்சமாகக் கருதப்படும் இவர் விஷ்ணுசித்தர் என்றழைக்கப்பட்டார்.கண்ணபிரானின் கதைகளைப் பெற்றோர் மூலம் கேட்டறிந்த விஷ்ணு சித்தர் அவன் பக்தியில் திளைத்தார். வட பத்ரசாயி என்ற ரங்க மன்னாருக்காக நந்தவனம் அமைத்து, துளசி மாலைகளை அன்றாடம் கோயிலுக்குச்

சமர்ப்பித்தார். எம்பெருமானின் கட்டளைப்படி, பாண்டிய நாடு சென்று பரமனைச் சரணடைவது ஒன்றே முக்திக்கு வழிகாட்டும் என்ற தத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். மன்னர் மகிழ்ந்து "பட்டர் பிரான்" என்ற பெயரை விஷ்ணு சித்தருக்களித்தார்.மன்னன் தமக்களித்த பொன் நகைகளை ரங்கனுக்கு அணிவித்து மகிழ்ந்தார். தம் நந்தவனக் கைங்கர்யத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு பூமாலையோடு, பாமாலையும் ஸ்ரீமந் நாராயணனுக்களித்து பெரியாழ்வார் என்ற பெயர் பெற்றார்.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி போன்ற பிரபந்தங்களை இயற்றினார்.

**ஸ்ரீஆண்டாள்**

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பெரியாழ்வார் வீட்டு நந்தவனத்தில் நள ஆண்டு ஆடிப்பூரத்தன்று அவதரித்த கோதை நாச்சியார் கி.பி.9ம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகஅறிகிறோம்.அரங்கனையே மனத்தில் மணாளனாக எண்ணி அவளுக்கு அணிவிக்கும் மாலையை தந்தை பெரியாழ்வாருக்குத் தெரியாமல் முதலில் தான் சூடிக் கொண்ட பிறகே கோயிலுக்கு எடுத்துச் செல்வார். இந்த சூடிக்கொடுத்த சுடர்கொடி ஒரு நாள் உண்மை தெரியவர, தந்தையின் கோபத்திற்கு ஆளானார். ஆனால் ரங்க மன்னாரோ சூடியவளின் அன்பையுணர்ந்தவன். அவள் அணிந்த மாலையே தனக்கு வேண்டுமென்று பணித்து, "அவள் ஆண்டாள்" என்று அறிவித்து ஊரறியக் கைப்பிடித்துத் தன்னவளாக்கிக் கொண்டார். பரந்தாமனையே கைப்பிடித்து அவனில் ஐக்கியமான ஆண்டாள் பூதேவியின் அம்சமாகக் கருதப்படுகிறார். முப்பது பாசுரங்கள் கொண்ட திருப்பாவையும் 143 பாசுரங்களை கொண்ட நாச்சியார் திருமொழியும் ஆண்டாள் நமக்களித்த நான்முத்துக்கள்.

**குலசேகரஆழ்வார்**

மலைநாடான சேர நாட்டைச் சேர்ந்த திருவஞ்சிக் கோலத்தில் கி.பி. 8ம் நூற்றாண்டில் பராபவ வருடம், மாசிமாதம், புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்தார். ஸ்ரீமஹாவிஷ்ணுவின் கௌஸ்துபத்தின் அம்சமாக இவர் கருதப்படுகிறார். அரச குலத்தில் பிறந்த இவர் வடமொழியிலும் தேர்ச்சி பெற்று வில் வித்தை, வாள் பயிற்சி முதலியவற்றையும் பயின்றார். பாண்டிய அரசனின் மகளை மணந்து மணவாழ்க்கையில் ஈடுபட்டு, பல போர்களையும் வென்றார்.

ஸ்ரீமந் நாராயணனே இவ்வுலக வாழ்க்கை மாயை என்பதை அவருக்குணர்த்திய பின் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு, கடவுள் பக்தியைப் பரப்புவதே தன்கடமையென எண்ணினார்.

தன்னை யசோதையாகவும், கண்ணனைத் தன் குழந்தையாகவும் பாவித்துப் பல பாசுரங்கள் இயற்றினார். ராமாயணக் கதைகளைக் கேட்டுணர்ந்து ராமபக்தியில் மூழ்கித் திளைத்தார்.பெருமாள் திருமொழி என்ற பெயரில் 105 பாசுரங்கள் இயற்றி திருவரங்கனுக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே காலம் கழித்துப் பரம பதமடைந்தார்.

**மதுரகவிஆழ்வார்**

ஆன்மீகம் தழைத்து வந்த பாண்டிய நாட்டில் திருக்கோவூர் என்ற தலத்தில் கி.பி. 9ம் நூற்றாண்டில் ஈஸ்வர வருடம், சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரம் கூடிய நாளில் அவதரித்தார்.

நம்மாழ்வார் பிறப்பதற்கு முன் அவதரித்திருந்தாலும், நம்மாழ்வார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் எனலாம். சிறு வயதிலிருந்தே ஸ்ரீமந் நாராயணனிடம் பக்திகொண்டு பரமனைப் போற்றிப் பாடிவந்தார். வடமொழிப் புலமையும் கொண்டிருந்தார்.

ஒருநாள் பூஜைகள் நடத்திய பின்பு காட்டுத் தீயோ என்று எண்ணும் படியான பெரிய ஒளியைக் கண்டார். அந்த ஒளி நட்சத்திரமாக இவரைத் தெற்கு நோக்கி அழைத்து வந்தது. திருநகரி என்ற ஊரில் சென்று மறைந்தது. அங்கு கோயிலில் மரத்தடியில் 16 வருடங்களாகக் கண் மூடிய நிலையில் தவமிருந்த நம்மாழ்வாரைப் பற்றிக் கேள்விப் பட்டார். தம் அறிவுக் கூர்மையால் பேசாதிருந்த நம்மாழ்வாரைக் கண்திறக்கவும், பேசவும் வைத்தார்.

நம்மாழ்வாருடைய தத்துவ விளக்கங்களைக் கேட்டறிந்து தலை மேல் கரம் குவித்து "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பாசுர பாமாலை பாடி நம்மாழ்வாரையே தம் ஞானகுருவாக ஏற்றுக் கொண்டார். அவரிடமிருந்து வேதங்களைக் கற்று பரமனின் திருவடிகளே சரணம் என்று பாசுரங்கள் பாடி மகிழ்ந்தார்.

ஆலயத்தினுள்ளே நம்மாழ்வாரின் சிலை ஒன்றையும் நிறுவி ஸ்ரீமந் நாராயணனுக்கும், தம் ஆன்மீக குருவிற்கும் தினசரி பூஜைகள் செய்தும் பாசுரங்கள் பாடியும் பரமனை சேர்ந்தார்.

**திருப்பாணாழ்வார்**

சோழவள நாட்டின் தலைநகராக ஒருகாலத்தில் விளங்கிய உரையூரில் கி.பி.8ம் நூற்றாண்டில் காத்திகை மாதம், ரோகிணி நட்சத்திரத்தில் பாணர் என்ற இசை வழிபாடு செய்யும் குலத்தில் அவதரித்தார்.ஸ்ரீமந் நாராயணனின் மார்பில் இருக்கும் ஸ்ரீவத்ஸம்

என்கிற மருவின் அம்சமாக விளங்குகிறார். தீண்டத் தகாத குலத்தில் பிறந்தவர் என்று கருதப் பட்டதால் காவிரியைக் கடந்து அரங்கத்தம்மானைக் கண் குளிரக் காண முடியவில்லையே என்று வருந்தி, காவிரியின் அக்கரையில் நின்ற படியே திருவரங்கம் இருக்கும் திசை நோக்கித் தவமிருந்தார்.

தினசரி திருமஞ்சனம் செய்யும் உலோக சாரங்க முனிவரின் கனவில் தோன்றிய எம்பெருமான், அக்கரையில் தவமிருக்கும் திருப்பாணாழ்வாரை பட்டரின் தோளில் சுமந்து வரச்செய்து அவருக்குக் காட்சியளித்தார். தான் கண்ட காட்சியில் உள்ளம் நெகிழ்ந்து அரங்கனின் திருவடி தொடங்கி திருமுடி வரை வர்ணிக்கும் 10 பாசுரங்களைப் பாடினார்.

ஆண்டாளைப் போலவே அரங்கனிடம் அன்பு வைத்து அவனையே நினைந்து எம்பெருமானுடன் கலந்தார் என்பது புராண வரலாறு. தம் பாசுரங்களில் மனிதர்கள் எப்படி பக்தி மார்க்கத்தில் வாழ வேண்டும் என்ற முறைகளையும், பெருமானிடம் சரணாகதி அடைவதன் அவசியத்தையும் அழகாகப் பாடியுள்ளார்.

**விஷ்ணு பகவானின் 10 அவதாரங்களும்... அதன் கதைகளும்.**

இந்து புராணங்களுக்கும், அதன் மர்ம கதைகளுக்கும் முடிவே கிடையாது. நீங்கள் உங்களை எந்தளவுக்கு இந்த மர்ம கதைகளில் கொண்டு போகுறீர்களோ அதற்கேற்ற உட்கிளர்ச்சியை அடைவீர்கள். ஒவ்வொரு சடங்குக்கும் அழகாக விவரிக்கப்பட்ட கதைகளின் வடிவத்தில், ஒரு விளக்கத்தை நாம் காண நேரிடலாம். தலைமுறை கடந்து இந்த கதைகள் எடுத்துச்செல்லப்பட்டு இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சரி, இன்று இந்து புராணத்தில் இருந்து அதே போன்ற மற்றொரு சுவாரசியமான கதையை பற்றி இப்போது பார்க்க போகிறோம். இது அனைத்து இந்து சமயத்திரு நூல்களிலும் மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. இக்கதை, இந்த அண்டத்தை காக்கும் விஷ்ணு பகவானை பற்றியதாகும். உலகத்தில் எப்போதெல்லாம் அநீதியும் தீய சக்தியும் தலை விரித்து ஆடுகிறதோ, அப்போதெல்லாம் அதனை வேரோடு கருவறுக்க விஷ்ணு பகவான் வந்து சேர்வார் என்று நம்பப்படுகிறது.

**சுவாரஸ்யமான வேறு: சிவலிங்கத்தின் முக்கியத்துவம்!**

மனித இனத்தை மிரட்டும் அவ்வகை தீய சக்திகளை அழிக்க காலத்திற்கேற்ப ஒவ்வொரு அவதாரத்தில் தோன்றியுள்ளார் விஷ்ணு பகவான். இது வரை விஷ்ணு

பகவான் 9 அவதாரங்களை எடுத்துள்ளார் என்று நம்பப்படுகிறது. அவருடைய பத்தாவது அவதாரம் கலியுகம் முடியும் தருவாயில் வெளிப்படும் என்றும் நம்பப்படுகிறது. அதனால் இந்த பத்து அவதாரங்களையும் ஒன்று சேர்த்து தசாவதாரம் என்று அழைக்கின்றனர்.

சத் யுகத்தின் போது, இந்த பூமி மீது முதல் மூன்று அவதாரங்கள் எடுக்கப்பட்டது. அடுத்த மூன்று அவதாரங்கள் திரேட்டா யுகத்தில் எடுக்கப்பட்டது. ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது அவதாரங்கள் ட்வபரா யுகத்தில் எடுக்கப்பட்டது. கலியுகத்தில் பத்தாவது அவதாரம் எடுக்கப்படும் என்றுகூறப்பட்டுள்ளது.



மச்ச அவதாரம்

சத் யுகத்தின் தொடக்கத்தில் ஒரு பெரிய மீனின் வடிவத்தில் அவதரித்தார் விஷ்ணு பகவான். ஒரு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கின் போது, மச்ச அல்லது மீனின் அவதாரத்தை எடுத்த விஷ்ணு பகவான் படகில் இருந்து மனு மற்றும் பிற உயிர்களையும் காப்பாற்றினார். மனு என்பவர் இந்த உலகத்தின் முதல் மனிதன். அவன் மூலமாக தான் மனித இனம் பெருகியது என்று நம்பப்படுகிறது. இந்த பெரிய வெள்ளத்தின் போது, இந்த உலகத்தில் உள்ள மீனின் வகைகள் ஒவ்வொன்றிலும் ஒன்றை எடுத்துக் கொண்டு அவன் படகில் போட்டு கொண்டான். அவன் புதிய உலகிற்கு பயணிக்க மீனின் வடிவத்தில் இருந்த விஷ்ணு பகவான் உதவினார்.



**கூர்ம அவதாரம்**

விஷ்ணு பகவான் கூர்ம அல்லது ராட்சச ஆமை வடிவத்தின் மூலமாக தன் இரண்டாம் அவதாரத்தை எடுத்தார். பாற்கடலை கடைவதற்கு மந்திரசாலா மலை கடையும் கருவியாக பயன்படுத்தப்பட்டது. ஆனால் அந்த பாற்கடல் மிகவும் ஆழமாக இருந்ததால், மந்திரசாலா மலை கடலில் மூழ்க தொடங்கியது. அப்போது ராட்சச ஆமை வடிவத்தை எடுத்த விஷ்ணு பகவான் அந்த மலையை தன் தோல் மீது சுமந்து கொண்டார்.



**வராக அவதாரம்**

விஷ்ணு பகவானின் மூன்றாம் அவதாரம் இது. வராக என்ற வார்த்தைக்கு காட்டு பன்றி என்ற அர்த்தமாகும். அண்டத்துக்குரிய பகுதியின் கீழ் இந்த உலகத்தை எடுத்துச் சென்ற ஹிரன்யக்ஷா என்ற அரக்கனிடம் கொல்லவே விஷ்ணு பகவான் இந்த அவதாரத்தை எடுத்தார். ஹிரன்யக்ஷாவை வராக வடிவத்தின் மூலம் கொன்ற பிறகு, இந்த உலகத்தை மீண்டும் அது இருந்த இடத்திலேயே வைத்தார் விஷ்ணு பகவான்.




**நரசிம்ம அவதாரம்**

விஷ்ணு பகவானின் கடுஞ்சினமான அவதாரம் இது. நரசிம்மா என்றால் பாதி மனிதன் பாதி சிங்கம். சத் யுகத்தில் ஹிரன்யகஷிபு என்ற அரக்கனை கொல்ல விஷ்ணு பகவான் இந்த அவதாரத்தை எடுத்தார். தன்னை எந்த ஒரு மனிதன் அல்லது விலங்கினாலும், வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும், பகலிலும் இரவிலும், பூமியிலும் ஆகாயத்திலும், எந்த ஒரு ஆயுதத்தை கொண்டும் தன்னை கொல்ல முடியாது என்ற வரத்தை பெற்றிருந்தான். அதனால் பாதி மனிதன் பாதி சிங்க உருவத்தை எடுத்த விஷ்ணு பகவான், பொழுது சரியும் நேரம், அந்த அரக்கனின் வீட்டில், அவனை தன் மடியில் போட்டு தன் நகத்தினால் கொன்றார்.




**வாமண அவதாரம்**

திரேட்டா யுகத்தில் இந்த அவதாரத்தை எடுத்தார் விஷ்ணு பகவான். ஒரு முறை பாலி என்ற அசுர அரசன் இந்த உலகத்தை ஆண்டு வந்தான். மிகவும் சக்தி வாய்ந்து விளங்கிய அவன் மூவுலகத்தின் மீதும் வலுக்கட்டாயமாக தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். இருப்பினும் தர்ம காரியங்களின் மீது நம்பிக்கை கொண்ட நல்லதொரு அரசனாகவே இருந்தான். அதனால் வாமண அல்லது குள்ள பிராமிண மனித அவதாரத்தை எடுத்த விஷ்ணு பகவான் அவனிடம் மூன்றடி நிலத்தை கேட்டார். இதற்கு பாலி ஒப்புக்கொண்டான். கடவுள் தன் காலடியை எடுத்து வைத்த உடனேயே, ஆகாயம் மற்றும் கீழ் உலகத்தை எடுத்துக் கொண்டார். அது விஷ்ணு பகவான் என்று உணர்ந்த பாலி, அவர் அடுத்த எட்டை எடுத்து வைக்க தன் தலையை கொடுத்தான். பாலியின் தலை மீது விஷ்ணு பகவான் கால் வைத்த உடனேயே உலகத்திற்குள் நுழைந்து மோட்சத்தை பெற்றான் பாலி.



**பரசுராம அவதாரம்**

இந்து மதத்தில், பரசுராம் என்பவன் முதல் ஷத்ரிய பிராமிணன் ஆகும். அராஜகம் செய்து வந்த ஷத்ரியர்களின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவே பரசுராமன் அவதரித்தார். சிவபெருமானை வழிப்பட்ட பரசுராமன், ஒரு கோடாரியை பரிசாக பெற்றான். அதனை வைத்து ஷத்ரிய வம்சத்தையே இந்த உலகத்தை விட்டு துடைத்து எடுத்தான்.



ராம அவதாரம்

அயோத்யாவின் இளவராசான ராமர் அசுர அரசரான ராவணனை அழித்தார். ராமரின் மனைவியை ராவணன் இலங்கைக்கு தூக்கி சென்ற போது, அவளை தேடி ராமர் வந்தார். பெரிய ஒரு போருக்கு பிறகு, ராவணனை வீழ்த்தி நல்லொதொரு ஆட்சியை அமைத்தார்.




கிருஷ்ண அவதாரம்

கிருஷ்ண அவதாரம் விஷ்ணு பகவானின் புகழ் பெற்ற ஒரு அவதாரமாகும். ட்வபரா யுகத்தின் போது கிருஷ்ணர் வடிவத்தில் தன் அவதாரத்தை எடுத்தார் விஷ்ணு பகவான். தீய அரசனான கம்சனை கொல்வதற்காகவே அவர் கிருஷ்ணனாக பிறந்தார். இந்த அரசன் கிருஷ்ணனின் தாய்மாமன் என்பது குறிப்பிடத்தக்கது. மகாபாரதத்தில் கிருஷணரே முக்கியமான பங்கை வகித்தார். அர்ஜுனனுக்கு குருவாக இருந்து, குருக்ஷேத்திர போரில் பாண்டவர்கள் வெற்றி பெற உதவினார்.



புத்த/பலராம அவதாரம்

புத்தரை விஷ்ணு பகவானின் ஒன்பதாவது அவதாரமாக சிலர் கருதினாலும் கூட, கிருஷ்ணரின் மூத்த சகோதரனான பலராமனே விஷ்ணு பகவானின் ஒன்பதாவது அவதாரம் என்றும் கூறப்படுகிறது. இந்த சர்ச்சை விஷ்ணு பகவானின் ஒன்பதாவது அவதாரத்தை சுற்றியுள்ளது.



கல்கி

கல்கி அல்லது தீமைகளின் அழிப்பான் தற்போதுள்ள கலியுகத்தின் முடிவில் அவதிரப்பான் என்று நம்பப்படுகிறது. இந்த அவதாரத்தின் போது ஒரு வெள்ளை குதிரை வடிவில், கையில் ஒரு பெரிய வாளோடு, மனித இனத்திற்கு தீங்கு விளைவிக்கும் சக்தியை அழிக்கும் என்று நம்பப்படுகிறது. தீமையை அழித்து கல்கி யுகத்தை முடிவுக்கு கொண்டு வருவார் என்று நம்பப்படுகிறது. நேர்மையை காத்து மீண்டும் சத் யுகத்தை தொடங்கி வைப்பார் கல்கி என்றும் சொல்லப்படுகிறது.

திலகவதியார்

திலகவதியார் திருவாமூர் என்ற தலத்தில் வசித்த வேளாளர் குடும்பத்தில் புகழனார்-மாதினியார் தம்பதி. இவர்களது மகள் திலகவதி. இவரையடுத்து பிறந்த மகனுக்கு மருள்நீக்கி என்று பெயரிட்டனர். அக்காவுக்கும், தம்பிக்கும் வயது வித்தியாசம் அதிகம். திலகவதிக்கு பல்லவமன்னனின் சேனாதிபதியாக இருந்த கலிப் பகையாருக்கு திருமணம் செய்து வைப்பதென முடிவு செய்தனர். இந்நிலையில் திலகவதியின் தந்தை புகழனார் இறந்து போனார்.

கணவன் சென்ற வருத்தம் தாளாமல் மனைவி மாதினியாரும் பின்தொடர்ந்து விட்டார். திலகவதியும், மருள்நீக்கியும் அனாதையாக விடப்பட்டனர். இருப்பினும், கலிப்பகையாரின் குடும்பத்தார், திலகவதியாரை தங்கள் வீட்டு மருமகளாக ஏற்றுக்கொள்வதில் பின்வாங்கவில்லை. வடநாட்டிற்கு போருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார் கலிப்பகையார். வெற்றியுடன் திரும்புவேன், என் மணநாள் பரிசாக அதை உங்கள் திருவடியில் சமர்பிப்பேன், என மன்னரிடம் சூளுரைத்து கலிப்பகையார் கிளம்பினார். கொடிய சண்டை நடந்தது. கலிப்பகையாரின் வீரம் கண்டு வடநாட்டு மன்னன் அஞ்சினான். படைகள் பின்வாங்கி ஓடின. வீரத்தால் அவரை வெற்றி கொள்ள இயலாது எனக்கருதிய வடமாநில மன்னன், வஞ்சகமாக அவரைக் கொன்று விட்டான். வீரமரணம் அடைந்தார் கலிப்பகையார். திலகவதி தன் உயிரை மாய்த்துக்கொள்ள துணிந்து விட்டாள்.அவள் மரணத்தை தழுவ இருந்த வேளையில் இரண்டு பிஞ்சுக் கரங்கள் அவளது கால்களைக் கட்டிக் கொண்டன. தாய் தந்தைக்குப் பிறகு இப்போது நீயே என் பெற்றோர், சகலமும் நீயே, என்று கதறினார் மருள்நீக்கி. அக்கா தன் தம்பியை வாரி அணைத்துக் கொண்டாள். திக்கற்ற பெண் இவ்வுலகில் வாழ இயலாது. இருப்பினும், உனக்காக வாழ்வேனடா! ஆனால், கணவனை இழந்த பெண்கள் எப்படி இந்த பூமியில் கைம்மை நோன்பு பூண்டு வாழ்கிறார்களோ அப்படி வாழ்வேன். அதுவும் உனக்காக, என்றாள். மருள்நீக்கியை பெரும் சிவ பக்தனாக வளர்த்தாள். ஆனால் சைவ சமயத்தை விடுத்து சமணர்களின் போதனையால் வசமான மருள்நீக்கியார் சமண் சமயமே சிறந்தது எனக் கருதிச் சமணமுனிவர்கள் நிறைந்த பாடலிபுரத்திற்குச்சென்று மதம் மாறி சமண மதப் பிரச்சாரம் செய்தார்.அப்போது சமணர்கள் அவருக்கு தருமசேனன் என்றுப் பெயர் வைத்தனர். அப்போது தனது அக்கையைக் காண வந்த தருமசேனரை " நீறணியாதவன் முகத்தைக் காணமாட்டேன்" என்று திருநீற்றின் பெருமையை உணர்ந்து தன் தம்பியின் முகத்தைப் பார்க்க மாட்டேன் என உறுதியாக நின்றார். இருப்பினும் சமணத்தின் மீதிருந்த நம்பிக்கையால் தனது அக்கையைக் காணாமலேயே பாடலிபுத்திரம் திரும்பினார் தருமசேனர்.

சமண சமயத்தைச் சேர்ந்த தனது தம்பியை மீண்டும் சைவ சமயத்திற்கு கொண்டுவரும் படி திலகவதியம்மையார் திருவதிகை பெருமானிடம் வேண்டி நிற்க அதற்கு இறைவனும் திருச்செவி சாய்த்தார். அதன் படி தருமசேனருக்கு கடும் சூளை நோய் கொடுத்து விளையாடினார் இறைவன். சமணர்களின் தந்திரமும், வைத்தியங்களும் தருமசேனரைக் குணப்படுத்தவில்லை. ஆதலால் சமணத்தின் மீதிருந்த விருப்பத்தை தருமசேனர் விடுத்து தற் அக்கையைக் காண திருவதிகைக்கு வந்தார். வந்தவரை மீண்டும் திலகவதியார் " நீறணியாதவன் நெற்றியைக் காணமாட்டேன்" என்றுக் கூறி பார்க்க மறுத்தார். அக்கையாரின் பாதங்களில் விழுந்து வணங்கிய தருமசேனருக்கு திலகவதியார் தனது கைகளால் திருநீறு பூசி, திருவதிகைப் பெருமான் முன்னர் அழைத்துச்சென்றார்.

திருவதிகைப் பெருமானின் முன்னர் " கூற்றாயினவாறு விலக்ககலீர்" எனும் திருப்பதிகம் பாடி சூளை நோய் மற்றும் சமணம் எனும் நோயில் இருந்து விடுபெற்று, மீண்டும் சிவனடியாராகினார் தருமசேனர். அப்போது திலகவதியார் அவருக்கு "திருநாவுக்கரசர்" என்றுப் பெயர் வைத்தார்.அதன் பின்னர் பெரும் மனநிறைவுடன் தன்னுடைய வாழ்நாளின் கடைசி மூச்சு வரை சிவ தொண்டைச் செய்து இறைவனின் திருப்பாதங்களை அடைந்தார் திலகவதியார்.